விலை ரூபா: 8.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி
*Valampurii*


பக்கங்கள்:– பன்னிரண்டு

சங்கு 06 | வள்ளுவர் ஆண்டு 2036 | புரட்டாதி 08 சனிக்கிழமை (24.09.2005) | தொலைபேசி 222 3378, 222 7644 | ஒலி 279

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
சீமெந்து

# புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் வாக்குச்சாவடிகள் அமைக்கப்படாது

## தேர்தல் ஆணையாளர் நேற்று அறிவிப்பு



ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்குச் சாவடிகள் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அமைக்கப்படமாட்டாது என தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்தார்.

பாதுகாப்புக் காரணங்களைக்கருத்திற் கொண்டே அங்கு வாக்குச்சாவடிகளை அமைக்கப்பட வில்லை எனினும் அங்குள்ள வாக்காளர்கள் வாக்களிப்பதற்கென கொத்தணி வாக்குச்சாவடிகளை அமைப்பதற்கு நடவடிக்கை யெடுக்கப்பட்டுள்ளதாக நேற்று கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே தேர்தல் ஆணையாளர் இதனைக் கூறினார். (12ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தினரால் கைதான மாணவனை பல்கலை மாணவர்கள் அழைத்து வந்தனர்

### முகமாலையில் நேற்றுச் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சியிலிருந்து யாழ்.நோக்கி வந்துகொண்டிருந்த யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவன் ஒருவன் முகமாலையில் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டான்.

நேற்றுக்காலை 7.45 மணியளவில் யாழ்.நோக்கி வந்துகொண்டிருக்கையிலேயே அவன் கைதுசெய்யப்பட்டான்.

இச் சம்பவத்தினையடுத்து 500ற்கும் மேற்பட்ட யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் நேற்றுக்காலை 10.30மணிக்கு முகமாலை சோதனைச் சாவடியினுள் நுழைந்து அங்கு கைதுசெய்யப்பட்டிருந்த மாணவனை அழைத்துவந்தனர்.

இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்ட மாணவனை மீட்டு பல்கலைக்கழக மாணவர்கள் சென்றிருந்தவேளை சம்பவ இடத்திற்கு இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு உறுப்பினர்களும் சென்றிருந்தனர்.

இராணுவத்தினர் கைதுசெய்து வைத்திருந்த மாணவனை அச்சுறுத்தி பொய்யான வாக்கு மூலங்களை இராவணுத்தினர் பெற்றுள்ளதாக குற்றஞ்சாட்டப்பட்டது. இது தொடர்பாக கண்காணிப்புக் குழுவிடம் முறையிடப்பட்டுள்ளது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஐக்கிய தேசியக் கட்சியிடையே உள் முரண்பாடுகள் அதிகரிப்பு

(கொழும்பு)

ஐக்கியதேசிய கட்சியிடையே உள்முரண்பாடுகள் அதிகரித்துள்ளன. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவுக்கும் கட்சியின் மூத்த உறுப்பினர்களான கருஜெயசூரிய மற்றும் எஸ்.பி.திஸநாயக்க ஆகியோருக்கிடையே முரண்பாடுகள் அதிகரித்துள்ளன.

ஐக்கிய தேசியக்கட்சியின் மாவட்டத் தலைவர் பதவிகளில்இருந்து விலகுமாறு அக்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க விடுத்த வேண்டுகோளை கருஜெயசூரிய , எஸ்.பி.திஸநாயக்கஆகியோர்நிராகரித்துவிட்டனர்.

ஐக்கிய தேசியக்கட்சி உதவிச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, பிரதித்தலைவர் கருஜெயசூரிய, தேசிய ஒருங்கிணைப்பாளர் எஸ்.பி. திஸநாயக்க ஆகியோரை கட்சியின் மாவட்ட தலைவர் பதவியில் இருந்து விலகுமாறு ரணில் விக்கிரமசிங்க கேட்டுக்கொண்டார்.

கண்டி மாவட்ட தலைவர் பதவியில் இருந்து திஸ்ஸ அத்தநாயக்க விலகி நாடாளுமன்ற உறுப்பினர் கெகலிய ரம்புக் வெலவிடம் ஒப்படைத்து விட்டார்.

ஆனால் திஸநாயக்காவும் கருஜெயசூரியவும் தாங்கள் பதவி விலக முடியாது என்று கட்சியின் நிர்வாகக்குழுக் கூட்டத்தில் இப்பிரச்சினையை எழுப்புவோம் என்று கூறிவருகின்றனர். (ச)

## திருடர் தாக்கியதில் வயோதிப மாது மரணம்

### கொக்குவிலில் பயங்கரம்

(யாழ்ப்பாணம்)

வீட்டில் தனியாக இருந்த வயோதிபப் பெண் திருடர்களின் தாக்குதலுக்கு இலக்காகி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இச் சம்பவம் நேற்று மதியம் 1.30 மணியளவில் கொக்குவில் ஆடியபாதம் வீதியில் இடம் பெற்றது.

வீட்டில் தனியாக இருந்து தொலைக்காட்சி பார்த்துக்கொண்டிருந்த சமயம் உட்புகுந்த திருடர்கள் உலக்கையால் அவரின் தலையில் தாக்கியதாக தெரிவிக்கப்பட்டது.

தாக்குதலுக்கு உள்ளான பெண் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். அவரது வீட்டிலிருந்த பெருமளவான நகைகளையும் பணத்தையும் திருடர்கள் அபகரித்துச் சென்றுள்ளனர்.

இச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த 7 பிள்ளைகளின் தாயாரான சுப்பிரமணியம் புனிதவதி (வயது 62) என்பவரே உயிரிழந்தவராவார். மரண விசாரணையின் பொருட்டு அவரது சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. (ச-19,4)


## இராணுவப் பேச்சாளராக பிரிகேடியர் நலின் விதாரண

(கொழும்பு)

இராணுவப் பேச்சாளராகவும், இராணுவ ஊடகப் பணிப்பாளராகவும் பிரிகேடியர் நலின் விதாரண பொறுப்பேற்றுள்ளார்.

இராணுவப் பேச்சாளராக பதவி வகித்த பிரிகேடியர் தயா ரத்நாயக்கா ஆசிய பசுபிக் வலய புலனாய்வு மற்றும் பாதுகாப்புத் தொடர்பிலான உயர் கல்வி பெறுவதற்காக இன்று ஹவாய் செல்வதையடுத்து அவரின் இடத்திற்கு பிரிகேடியர் நலின் விதாரண நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை பிரிகேடியர் தயா ரத்நாயக்காவுடன் பிரிகேடியர் லெனார்ட் மார்க், பிரிகேடியர் பொல் பெரேரா ஆகியோரும் ஹவாய்க்குச் செல்கின்றனர். (ச)




EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 077-2349999,
011-2372952/3, 011-2360290/1
e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.



எக்ஸ்போ.எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...



இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தேசத்தைப் பிளவுபடுத்தும் எந்தவொரு சக்திக்கும் இடமளிக்கப் போவதில்லை

## – பிரதமர் மஹிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

எந்தவொரு சக்தியும் தேசத்தை பிளவுபடுத்துவதற்கு இடமளிக்கப்



போவதில்லை என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அனைத்து இனமக்களும் அச்சமும் சந்தேகமும் இன்றி வாழக்கூடிய பின்னணியை உருவாக்கப் போவதாக பிரதமர் மீண்டும் உறுதியளித்துள்ளார்.

கம்பளையில் நேற்று முன்தினம் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அடுத்த சந்ததிக்கு சிறந்த கல்வி மற்றும் தொழில் வாய்ப்பு என்பனவற்றை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

பல்கலைக்கழகக் கல்வி வாய்ப்பினை இழந்திருக்கும் 98சத வீதமான இளைஞர், யுவதிகளுக்கு பயிற்சிகளை வழங்கி வெளிநாடுகளுக்கு அனுப்பிவைக்கும் திட்டம் மேலும் வலுப்படுத்தப்படும்.

வாழ்க்கைச் செலவினைக் குறைக்க வேண்டுமாயின் விவசாயத்துறையை அபிவிருத்தி செய்வது கட்டாயமானதாகும். அதற்கான தெளிவான திட்டம் என்னிடம் உண்டு எனவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார். (ந-4)

## சிறு விளம்பரம்

**இமயம்**

மாணவர்கள் படிப்பதற்கும் நடிப்பதற்கும் பொருத்தமான பதினொரு நவீன நாடகங்கள். 400 நாடகங்களும் 11 நாடக நூல்களும் எழுதிய கலாபூஷணம் அராலியூர் ந.சுந்தரம் பிள்ளை எழுதியது. வாங்கிப் படியுங்கள், நடியுங்கள் ரூபா150/= (9911)

**யுனிவெக்**

2005 A/L பரீட்சையில் சித்தியடைந்த 300 District Rank இற்கு உட்பட்ட வலிகாம பிரதேச மாணவர்கள் 29.09.2005ம் திகதிக்கு முன்னர் சங்கானை இலங்கை வங்கி அருகில் உள்ள யுனிவெக் கணனிப் பயிற்சிக் கல்லூரியில் 2000/= பெறுமதியான பரிசிலிற்கான காசோலையினைப் பெற்றுக்கொள்ளவும். ஏனைய பிரதேச மாணவர்களிற்கு பின்னர் அறிவிக்கப்படும்.

T.P.-077-6176476 (9912)

# தமிழருக்கு எதிராகப் பயன்படுத்தப்படும் அவசர காலச்சட்டத்தைக் கைவிட வேண்டும்

## இரா. சம்பந்தன் தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்த நிறுத்த ஒப்பந்த மீறலுக்கு வழிவகுக்கும் அவசரகாலச் சட்டத்தைக் கைவிட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் வலியுறுத்தியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் அவசரகாலச் சட்ட நீட்டிப்பு மசோதா மீதான விவாதத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

லக்ஷ்மன் கதிர்காமர் கொல்லப்பட்டதையடுத்து அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. அக்கொலையானது வன்மையாக கண்டிக்கத்தக்கது. புலனாய்வுத் துறையின் தோல்வியை வெளிக்காட்டும் சம்பவம் அது.

அவசரகாலச்சட்டத்தின் பெயரால் தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறைகள் அதிகரித்து வருகின்றன. கொழும்பு போன்ற நகரங்களில் நுழைகின்ற தமிழர்களிடம் பாரிய அளவில் சோதனைகள் நடாத்தப்படுகின்றன. பதிவு செய்துவிட்டுத்தான் உள்ளே நுழையும் நிலை இருக்கிறது.

இவ் அவசரகாலச் சட்டம் தமிழ் மக்களுக்கு எதிராகத்தான் பயன்படுத்தப்படுகிறது என்பதை நாம் அனைவரும் நன்கறிவோம். இச் சட்டமானது தமிழ் மக்களின் கண்ணியத்தின் மீதும் சுயமரியாதையின் மீது நிகழ்த்தப்பட்டு வரும் தாக்குதல் தமிழ் மக்களை இந்தச் சட்டத்தின் கீழ் மனிதாபிமானமற்ற முறையில் நடத்தி வருகின்றனர். அவசரகாலச் சட்டம் தொடர்ந்தால் இத்தகைய சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை இச்சட்டம் யுத்த நிறுத்த ஒப்பந்தத்துக்கு எதிரானது.

மக்கள் பெருந்தொகையாக வாழும் பிரதேசங்களில் இயல்பு வாழ்க்கையை மேற்கொள்ளுவதற்காக சோதனைச் சாவடிகளை அகற்ற வேண்டும் என்றுதான் யுத்த நிறுத்த ஒப்பந்தம் சொல்கிறது. ஆனால் அவசரகால சட்டத்தைப் பயன்படுத்தி தமிழர் பெரும்பான்மையாக வாழும் மாவட்டங்களில் புதிய சோதனைச சாவடிகள் அமைக்கப்பட்டு வருவது அப்பட்டமான யுத்தநிறுத்த மீறலாகும்.

இச் சூழல் சகித்துக்கொள்ள முடியாத ஒன்று என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கின்றோம். படைத்தரப்பில் கீழ் நிலையில் உள்ளவர்கள் அவசரகால சட்டத்தைப் பயன்படுத்தி சட்டத்தை தங்கள் கையில் எடுத்துக்கொண்டு ஏந்தக் கேள்வியும் கேட்பாரற்ற நிலையில் மோசமாக செயற்பட்டு வருகின்றனர். இந்நிலையில் தொடர்ந்தும் அவசரகால சட்டத்தை நீடிப்பதை அரசாங்கம் கைவிட வேண்டும் என அவர் தெரிவித்தார்.(த-4)

# தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக தபால் திணைக்கள ஊழியர்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

19 கோரிக்கைகளை முன் வைத்து தபால் திணைக்கள ஊழியர்கள் எதிர்வரும் 26ஆம் திகதி தொழிற்சங்க நடவடிக்கையொன்றை மேற்கொள்ளவுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

அன்றைய தினம் நள்ளிரவு முதல் பணிப்புறக்கணிப்பை மேற்கொள்ளவுள்ளதாக இலங்கை தபால் ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

9 தபால் சேவை தொழிற்சங்கங்கள் இணைந்து இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளது.

பல காலங்களாக தீர்க்கப்படாத பிரச்சினைகள் தமக்கு உள்ளதாக சங்கத்தின் பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

தபால் திணைக்களத்தில் பெருமளவு வெற்றிடங்கள் மற்றும் சம்பள முரண்பாடுகள் காணப்படுவதாகவும், அதிகரிக்கும் சனத்தொகைக்கு ஏற்ப தபால் சேவை அபிவிருத்தி செய்யப்பட வேண்டுமெனினும் அதிகாரிகள் இந்த விடயம் தொடர்பாக கவனத்தில் கொள்ளவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (த-9)

# இராசி பலன்

**24.09.2005**
**(புரட்டாதி 08, சனிக்கிழமை)**
**ஸப்தமி பின்னிரவு 3.11 மணிவரை**
**ரோகினி முற்பகல் 11.31 மணிவரை**
**அமிர்தசித்தம்**
**பின்னிரவு 3.11 இன் மேல் அட்டமி**
**இராகுகாலம் 09.02-10.32 மணிவரை**
**சுபநேரம் 3.02-4.32 மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | தனதானிய சேர்க்கை, குடும்பசுகம், தொழில்வருமானம், முயற்சி பலிதம். |
| இடபம் | சோம்பல்நிலை, பிறருக்கு உதவுதல், காரிய தாமதம், உஷ்ணவியாதி. |
| மிதுனம் | அபகீர்த்தி, புதிய திட்டமடல், வேலைச் சுமை, குடும்பக்கவலை. |
| கடகம் | மனோ தைரியம், களஸ்திரநன்மை, செய் தொழில்விருத்தி, நல்லவருமானம். |
| சிங்கம் | சரீரபீடை, பொருள்விரயம், வாகனபயம், வாக்குமேன்மை. |
| கன்னி | பிரபுத்தனம், நன்கொடை, தொழில் முன்னேற்றம், புதியசிந்தை. |
| துலாம் | நண்பர்கள் உதவி, தனலாபம், சுபநிகழ்வு, முயற்சி கைகூடும். |
| விருச்சிகம் | இனிய சம்பவம், உறவினர் வருகை, விருந்துபசாரம், தொழில்நன்மை. |
| தனுசு | ரோகபயம், முயற்சி தாமதம், கல்வியில் ஆர்வம், தனவிரயம். |
| மகரம் | தாழ்ந்த சுபாவம், எடுத்தகாரியம் தாமதமாகும், பணத்தட்டுப்பாடு, திடீர்நன்மை. |
| கும்பம் | கற்பனை மிகுதி, சயனசுகம், வெகுமானம், செல்வாக்கு. |
| மீனம் | வீண்விவாதம், காரிய தாமதம், செய் தொழில் நன்மை, பணவிரயம். |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.**

- வளவன்

# தே.சே.வங்கியின் கௌரவ கணக்கு சீட்டிழுப்பில் வல்வை வாசிக்குப் பரிசு

(பருத்தித்துறை)

தேசிய சேமிப்பு வங்கியின் "கௌரவ கணக்கு" அதிஷ்டசீட்டிழுப்பிலே பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கி "கௌரவ கணக்கு" வைப்பாளரான வல்வெட்டித்துறை கொற்றாவத்தையைச் சேர்ந்த பீ.சோமாஸ்கந்தராஜாவுக்கு 50,000 ரூபா பரிசு கிடைத்துள்ளதாக பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் ரீ.பரமானந்தம் தெரிவித்துள்ளார்.

இப்பரிசுத்திட்டம் இலங்கையில் உள்ள தேசிய சேமிப்பு வங்கிக் கிளைகளில் கௌரவ கணக்கு வைத்திருக்கும் முதியோர்களுக்கு நடாத்தப்பட்டு 10 பேருக்கு பரிசுகள் வழங்கப்பட்டுள்ளன. (அ-52)

**பொதுக்கூட்டம்**

பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணியளவில் வேலா யுதம மகாவித்தியாலயத்தில் தலை வர் பாலபத்மநாதக் குருக்கள் தலை மையில் நடைபெறவுள்ளது. (த.104)

# புலிகளைத் தடைசெய்ய முயன்றதாலேயே லக்ஷ்மன் கதிர்காமர் கொலைசெய்யப்பட்டார்

## அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவிப்பு

(கொழும்பு)

சில நாடுகளில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினரை தடைசெய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டதன் காரணமாகவே முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொலை செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் கதிர்காமர் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிராக சர்வதேச ரீதியில் செயற்பட்டுவந்த முக்கியஸ்தர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் சகல சந்தர்ப்பங்களிலும் ஐக்கிய இலங்கை குறித்து செயற்பட்டு வந்தார்.

மறைந்த வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் மீதான அனுதாப பிரேரணை குறித்து கருத்துத் தெரிவிக்கும் போதே சபை முதல்வர் சிறிபால டி சில்வா இதனைத் தெரிவித்தார்.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரை சமாதானத்திற்கு எதிரானவர் எனத் தெரிவிப்பது பிழையாகுமென இது குறித்து கருத்துத் தெரிவித்த எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

சகல இலங்கையரதும் கௌரவித்திற்காக செயற்பட்டவர் கதிர்காமர். இந்நிலையில் ஐக்கிய தேசியக்கட்சியின் காலப் பகுதியிலும் கதிர்காமருக்கு பூரண பாதுகாப்பை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டதையும் மஹிந்த சமரசிங்க குறிப்பிட்டார்.

கதிர்காமர் தங்கியிருந்த உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தை அவரிடமிருந்து தமது அரசாங்கம் மீளப் பெறவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-9)





பகவான் ஸ்ரீசத்திய சாயி பாபாவினால் பிரகடனப்படுத்தப்பட்ட இரத்ததான தினத்தில் யாழ்.சத்திய சாயிசேவா நிலையங்களின் உறுப்பினர்கள் யாழ்.சத்திய சாயி சேவா நிலையத்தில் இரத்தம் வழங்கும் காட்சியும், இரத்தம் வழங்க வருகை தந்த மகளிர் சிலரையும் படங்களில் காணலாம்.

# பாரிவள்ளலாக கல்வியை வாரி வழங்கிய ஆசான் சிவராமலிங்கம்

*கொட்டிவைத்த முத்தே குவித்த நவரத்தினமே*
*கட்டிக் கரும்பே கருணையின் கருவறையே*
*..ட்டுக் குடியழகா எங்கள் குரு மணியே*
*விட்டுப் பிரிந்தோமே விதியோ வினையின்*
*விளைவோ.*

யாழ்.குடாநாடு நீண்ட தனது வரலாற்றில் பல்வேறு மானுடங்களை, மயக்கமடையாத மனிதம் நிறைந்த- மயக்காத அறிவு ஊட்டுவதே பணியென உறுதி பூண்டவர்களைக் கண்டது. என்பது எல்லாவகையிலும் பொருத்தப்பாடுடையது. இத்தகைய மணம் வீசும் குணம் கெடா குருகுலத்தோன் அமரர் சிவராமலிங்கம் பிள்ளை அவர்கள்.

யாழ்.தீவகங்களின்எல்லைப்புறங்களில் ஒன்றாக அமைந்த புங்குடுதீவு. இத்தீவின் பழங்குடி-மேட்டுக்குடி இரு வழியும் சேர் தூயதனி நாயகம் குடிவழிவந்தவர் பேராசான் சிவராமலிங்கம். மங்களமானகுலம் என்று பேசுவார்கள். மங்களம் என்பதற்கு சிவம் என்றும் பொருள்படும். சிவத்தின் பெருமை தெரிந்த வம்சத்தில் வந்த வாய்ப்பு இவருக்குண்டு.

1956ஆம் ஆண்டு தொடக்க காலத்தில் ஆசிரிய வாழ்க்கையைத் தொடங்கினார். அவருடைய உண்மையும் உழைப்பும் யாழ். இந்துவின் மாணவர்களின் உள்ளத்தைத் தொட்டது. அவர்கள் அவருக்கு மானசீக அடிமையாகினார்கள். பல்லாயிரக்கணக்கான

விரும்பாதவர்.சங்கத்தமிழன் வாழ்வியலுக்கு உதாரண புருசர்.முடியாதவர்களுக்கு உதவும் சமூகத்தை நோகவைக்காமலும், சந்தர்ப்பத்துக்கேற்ப வாலைச் சுழற்றும் இன்றைய சமூகத்திற்கு மாறுபட்டவராக- உண்மையே உயர் வைத் தரும் என முழுமையாக நம்பி வாழ்ந்த ஓர் உன்னத மா மனிதர்.

பெருமகனார் பட்டப்படிப்பை முடித்து எப்போது தாய்நாடு சேர்ந்தாரோ அன்று தொட்டு தன்னை வளர்த்த கல்வித்தாய் யாழ்.இந்து அன்னையின் சிறப்பே பிறவிப் பேறு என்ற இலக்கை மையமாக வைத்து

நின்று உயர்த்த உதவும் அந்த உத்தமன் உண்மைமனிதன், உன்னதமான ஆன்மீகன். பெருமையுணர்ந்த போது அவரைப் பெற்ற மண் பெருமை கொள்கிறது. சைவமும் தமிழும் காலூன்றி நின்ற புங்குடுதீவின் சிறப்போ அம் மண்ணின் மைந்தனாகப் பிறந்த பயனோ சைவமும் தமிழும் தன் வாழ்வாய் வாழ்ந்து திளைத்தார்.

யாழ்.இந்துவின் மைந்தன், யாழ்.இந்துவின் ஆசான் அமரர் சிவராமரின் நிறைந்த முகமும் நெற்றியில் நீறும் மலர்ந்த முகமும் மாரியோ அன்றிப் பாரியோ என்ற வியப்பூட்டும் கருணையும் கல்லும் கரையும் கனிவும் எம்போன்ற கல் மனம் கொண்ட மாணவர்களிடையேயும் கருணை கடமை இதுவா? எனக் கனிய வைத்தது. தமிழுடன் ஆங்கிலமும் இலக்கியப் புலமையும் இவரிடம் அடைக்கலமானது. தெளிவான உரை நயங்கள், ஏற்புடைய விளக்கங்கள் எவருக்கும் எளிமையாய் உணர்த்தும் பாங்கும் பெருமகனுக்கு மாத்திரம் மட்டும் இயல்பானதொன்றென நான் கருதுகிறேன்.

இந்துக் கல்லூரியின் நல்லசைவைச் செம்மைப்படுத்தியவர். யாழ்.இந்துவின் பழைய மாணவர் சங்கத்தினை இறுதிக்கால



செய்யுமென நம்புகின்றேன். பேராசானின் வாழ்வில் மனதாலும் உடலாலும் ஏற்பட்ட சோதனைகள், வேதனைகள் எவருக்கும் ஏற்பட்டிருக்காது எனக் கூறலாம்.

இவையெல்லாம் எமை வழிப்படுத்த உதவியதோ என வியக்கின்றேன். எண்பது ஆண்டுகள் உலகியல் வாழ்வில் உழன்று பயின்றவர். எமக்குப் பயிற்றியவர். உன்னத

## மறைந்தார் மாண்பு

நான் யாழ்.இந்துக்கல்லூரியில் மாணவன் என்ற பெருமையைப் பெறுகின்றேன். ஆசான் சிவராமலிங்கம் அவர்களை முதன் முதலாக விடுதியில் அவருக்கென ஒதுக்கப்பட்ட அறையினில் எனது மாமனாருடன் நேர்கொள்கிறேன். சற்று அதிர்ச்சியடைந்தேன் இப்படியும் அழகர்கள் இருப்பார்களோ! ஐயுற்றேன். என்னிடம் அவர் பேசிய முறைமை, காட்டிய பரிவு, சொல்வினையம் அனைத்தும் என் எதிர்பார்ப்புகளுக்கு மாறாக செழுமையும் இனிமையும் இணைந்து சிரித்தது. அதன் முன் நான் கண்ட ஆசிரியத்துவத்துக்கு மிக வேறுபட்ட இலக்கணங்களைக் கொண்டவராக அவர் மிகவும் உயர்ந்து நின்றார் என்பதை என்னால் என்றும் நினைவு கொள்ள முடிகிறது.

சென்னைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சென்னை கிறிஸ்தவக்கல்லூரி போன்ற கல்விக் கோட்டங்களில் கல்வி பெற்ற பக்குவம். பேரறிஞர் தெ.பொ.மீ போன்ற மேதைகளிடம்நெருங்கிவாழ்ந்த அனுபவம். இவை அனைத்தும் அணிகலனாக தனக்கெனத் தனிப்புலம் ஒன்றை உருவாக்கியது. பணப்பலம் அற்றவர் என்பதால் சீண்டுதலோ அன்றேல் பெருமையுடையோர் என்பதால் அவர் சார்ந்து பேசவோ, செயற்படவோ

மாணவர்களைத்தாங்கி வழி நடத்திய ஆசான் பாரிசவாதத்தினால் ஊனமுற்ற கால்களினால், ஏற்பட்ட தேவையின் நிமிர்த்தம் அவரை அன்பு மாணவர் கை தாங்கிச் செயற்பட்ட, செயற்படுத்தும் காட்சியும் கண் முன்னே தோன்றுகிறது. அந்த குருபக்தியினையும் பாசப்பிடிப்பினையும் பகிர்ந்துகொள்ள பழைய மாணவர்கள் இன்று உலகெங்கும் இருக்கின்றனர் என்பதும் ஓர் சிறப்பு.

என்னை வாழ வைத்த என் போன்ற சாதாரண நிலை மாணவர்களையும் சமூகத்தில் சற்றே தலை நிமிர்ந்து நிற்க வைத்த பெருமையை என்னாலன்றி என் போன்ற மாணவ நண்பர்களால் என்றென்றும் நினைவு கொள்ளாதிருத்தல் ஏற்புடையதல்ல.

எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாது உலகின் செழிப்பிற்கென தொடர்ந்து பொழிகின்ற மாரி கண்டு வள்ளுவன் வியப்படைகின்றான். பிரதி பலனேதும் இன்றி பொழிகின்ற மழையோடு ,சமூக வளர்ச்சியை நன்மைக்காகக் கொண்டு உழைக்கும் உத்தமர்களை ஒப்பிட்டுவியப்படைகின்றார் வள்ளுவர்.

மாரியை மேவிய பாரி வள்ளல். பல் துறையிலும் பயன்தந்த கற்பக தரு அமரர் அவர்கள் என்பது சாலப் பொருத்தமானது. துணையற்றவர்க்கெல்லாம் உசாத்துணை

அசைவுகளை செம்மை செய்ய உதவிய ஒரே காப்பாளனாக, அனைவரும் வியக்கத்தக்க வகையில் அரணிட்டு அவைகாத்த தகைமையை ஆற்றலை வியக்காதாரில்லை எனலாம்.

அவரின் தன்னலமற்ற சேவையினால் தக்காராக தாம் தரம் உருவாக்கப்பட்டதை அவரின் மாணவர்கள் மறக்க மாட்டார்கள். அவர் கற்பித்த பாடங்களில் சோடை போன மாணவர்கள் இல்லையென அழுத்தமாகக் கூறமுடியும். ஆண்டவன் அடியில் நிரந்தரமாக இளைப்பாறும் வரை யாழ்.இந்துவின் நல்லசைவுக்காக நற்பணியாற்றிய நல்லவல்ல சீவன் 'என்கடன் பணி செய்து கிடப்பது' என்றார்ந்த ஞானம், ஆன்மீகப் பணி, அறிவுப் பணி செய்து எம்மைச் சீராக்கியது. ஆங்கிலத்தில் ஆன்ற புலமை பெற்ற ஆசிரியர் அவர்கள் அவ்வப் போது எனக்கு இலக்கியத்தை ஆய்ந்து அறிவு செய்தமையை, ஆற்றுப்படுத்தி ஆறுதல் தந்த நாட்கள் எண்ணற்றவை. பிறருக்கு உதவி செய்வதில் பெரும் மனநிறைவு பெறும் சீரும், தன்னைப் பிடிக்காதவரேயாயினும் அவர் தவறிழைத்தாராயினும் பிறர் மனம் நோகப் பேசாத பேராளன். அன்பாக இதமாக அரவணைத்து ஆற்றுப்படுத்தும் அன்பு ஆசனின் அரண், என் போன்ற மாணாக்கர்களையும் அழிவுப்பாயையிலிருந்து மீளச் செய்தது. ஆசானின் அறிவுரைகள் என்னை- எம்மை நல்லாற்றுப்படுத்தி அரண்

மான குடிகளை உருவாக்கியவர். தனக்கென ஓர் மாணவர் பரம்பரையை விட்டுச் செல்வதில் பெரும் மதிப்புப் பெறுபவர். கம்பன் கழகத்தை உருவாக்கிய பணியில் தங்களைத் தியாகம் செய்த மாணவ மணிகளை அழகாக வார்த்துக் கொடுத்த மேலாளர். அக் கழகக் காப்பாளர். கம்பவாரிதி ஜெயராஜ் போன்ற அறிவாளர்கள் கம்பனைச் சற்றே கண்டவர்களை வழிப்படுத்தியவர்தமிழ் ஆய்ந்த தகையுடையார்.

இந்துவின் மைந்தன்; ஆசிரியர்
**த.சிவபரஞ்சோதி** -ச.நீ
பல்கலைக்கழகமாணி

குறிப்பாக உலகனைத்திலும் செறிந்து வாழ்கின்ற யாழ்.இந்துவின் பழைய மாணவச் செல்வங்கள் தொடர்ந்து யாழ்.இந்துவின் மைந்தராக அவனடி சார்ந்து அரங்கேறி செழித்தோங்குபவர். அனைவருக்கும் பேராசான், கருணை வள்ளல் ஆசிகள் துணை நிற்கும். துணிவு தருமென நம்புவோம், ஆண்டவனை வேண்டுவோம்.

வெண்கட்டியைத் தொட்ட காலம் தொடக்கம் யாழ்.இந்துவின் களிமண் கட்டிகளையும் கணனிகற்கும் காலத்துக்கு ஏற்றவர்களாக அடியிட்ட அமரரின் பெருமை நீண்டு நிலைத்து நிற்கும் என நம்புவோம். வாழிய யாழ். இந்துக் கல்லூரி. வாழிய தமிழ் உலகம். ஓங்குக உயர் ஆசான் சிவராமலிங்கம்பிள்ளை நாமம்.

# தொடர் வழிகாட்டல் கருத்தரங்கு

இலங்கை கல்வி நிர்வாக சேவை வகுப்பு IIIஇலங்கை அதிபர் சேவை 2-II, 3ஆம் தரங்கள், இலங்கை ஆசிரிய சேவை வகுப்பு I பதவியுயர்வுப் பரீட்சைக்கான வழிகாட்டல் கருத்தரங்கு எதிர்வரும ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்.மத்திய கல்லுரியில் ஆரம்பமாகவுள்ளது.

இக்கருத்தரங்கில் பங்குகொள்ள விரும்புபவர்கள் சங்க அலுவலகத்தில் இன்றும் நாளையும மு.ப 8.00 மணி - பி.ப5.00 மணிரை பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கபட்டுள்ளது.

முன்கூட்டியே பதிவுகளை மேற்கொண்டால் அச்சடித்த குறிப்புக்கள் வழங்க இலகுவாக இருக்கும். புதிதாக நியமனம் பெற்ற ஆசிரியர்கள், பரீட்சைக்குத் தோற்றாதவர்கள் இதில் பங்குபற்றி சான்றிதழ்களைப் பெறறு தமது பதவியுயர்வுக்குப் பாவிக்க முடியும் என இலங்கை ஆசிரியர் சங்கச் செயலாளர் அ.பாலசந்திரன தெரிவித்துள்ளார். (ற)

# பொது நூலகத்தினுள் காலணியுடன் உட்செல்லத் தடை ஒரு மாத காலத்துக்கு தளர்த்தப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ்.பொது நூலகத்துக்குள் காலணிகளுடன் செல்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை மாநகர ஆணையாளர் சி.வி.கே.சிவஞானத்தின் பரிந்துரையின் பேரில் ஒருமாத காலத்துக்குத் தளர்த்தப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

இதுவரை காலமும் மேற்படி நூலகத்துக்குச் செல்பவர்கள் அணிந்து செல்லும் காலணிகளையும் காலுறைகளையும் கழற்றி அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் வைத்துவிட்டு வெறும் கால்களுடனேயே உட்பிரவேசிகக வேண்டுமென்ற விதி அமுலில் இருந்தது. காலணிகளுடன் உள்ளே சென்றால் ரெரசோ தரை அழுக்கடைந்து அலங்கோலமாகக் காட்சியளிக்கும் என்பதைக் கருத்திற்கொண்டே இத்தடை விதிக்கபபட்டிருந்தது.

தற்பொழுது மேற்படி நூலகத்துக்கு ஏராளமான மேல்நாட்டினர் தினசரி வந்து செல்வதால் அவர்களைக் காலணிகளை அகற்றிவிட்டு வெறும் காலுடன் வருமாறு கோருவது அநாகரிகமாகத் தென்படுவதால், காலணிகளை துடைப்பானில் நன்கு துடைத்து விட்டு உட்சென்றால் ரெரசோ தரைக்கு பாதிப்பு ஏற்படாது என்பதைக் கருத்திற்கொண்டே ஒருமாதகாலத்துக்கு இத்தடை தளர்த்தப்பட்டுள்ளதாக மாநகர ஆணையாளர் தெரிவித்தார்.

இத்திட்டத்துக்கு பொது மக்களது ஒத்துழைப்பும் கிடைக்குமானால் இத்தடையை நிரந்தரமாக நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தென்னிலங்கையில் எந்தவொரு பொது நிறுவனங்களுக்குள்ளும் வெறும் காலுடன்தான செல்லவேண்டுமென்ற சட்டம் இல்லை என்பதும், இலங்கையின் அதியுயர் அமைப்பான பாராளுமன்றக் கட்டடத் தொகுதிக்குள்ளேயே பாராளுமன்ற உறுப்பினர்கள், ஊழியர்கள் காலணியுடன் செலவதற்கு எந்தவொரு தடையும் கிடையாது என்பது குறிப்பிடத்தக்கது. (து-51)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் வாக்குரிமை பாதுகாக்கப்பட வேண்டும்

.(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் வாக்குரிமையை பாதுகாக்க வேண்டுமென சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் அமைப்பான பவ்ரல் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி தேர்தலை சுதந்திரமாகவும், நீதியாகவும் நடத்துவதற்குரிய பல்வேறு விடயங்களை தாம் தேர்தல் ஆணையாளரின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளதாக பவ்ரல் அமைபபின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கிங்ஸ்லி ரொட்ரிக்கோ தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் குறித்து பவ்ரல் அமைபபு தேர்தல் ஆணையாளருடன் கடந்த புதன் கிழமை கலந்துரையாடியது. இதன்போது உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் எதிர் வரும் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கை குறித்து ஆராயப்பட்டுள்ளது.

சுனாமி அனர்த்தம் மற்றும் உள்நாட்டு யுத்தம் என்பவற்றால் இடம்பெயர்ந்தவர்கள் வாக்களிப்பதற்கான வசதிகள் குறித்தும் ஆராயப்பட்டது.

குறிப்பாக அரசாங்கம் மற்றும தனியார் ஊடகங்கள் செயற்படும் விதம குறித்தும் தேர்தல் ஆணையாளர் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் அரசாங்க வளங்களைத் துஷ்பிரயோகம் செய்யாது தடுககும் வழி குறித்தும் கலந் துரையாடப்பட்டது.

அரசியல அமைபபின 17 ஆவது திருதத உறுப்புரைக்கு ஏற்றவகையில் தேர்தல் ஆணையாளர் செயற்படவேண்டிய விதம் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. (த-9)

# ம.உ.ஆ. குழு அதிகாரிகள் பருத்தித்துறைக்கு விஜயம்

## மீனவர்களின் பிரச்சினைகளை ஆராய்வு

(திருநெல்வேலி)

யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவின அதிகாரிகள் நேற்றுமுன்தினம் பருத்தித்துறைக்கு விஜயமொன்றை மேறகொண்டனர்.

அங்கு அவர்கள் மீனவர்களைச் சந்தித்து அவர்களின பிரச்சினைகள் தொடர்பாக விரிவாகக் கேட்டறிந்தனர்.

தென்பகுதியிலிருந்து வடபகுதிக்கு வந்து மீன்பிடிககும் மீனவர்களுக்கு பாஸ் நடைமுறை இல்லாதபோது எங்களுக்கு மட்டும பாஸ் நடைமுறையா என மனித உரிமை ஆணைக்குழு அதிகாரி ரோகித பிரிய தர்ஷனவிடம் இதன்போது மீனவர்கள் கேள்வி எழுப்பினர்.

இதற்கு அவர் பதிலளிக்கையில், இது தொடர்பாக மேலதிகாரிகளுடன் பேசி உரிய பதில் அளிப்பதாகத் தெரிவித்தார். (த-43)

# தடுப்பூசி மருந்து

(மருதங்கேணி)

வடமராட்சி பிரதேசத்தில் உள்ள ஊர்க் கோழிகளில் கொள்ளைநோய் அறிகுறிகள் தென்படுவதால் பருத்தித்துறை அரசினர் காலநடை வைத்திய நிலையத்தால் பிரதி சனிக்கிழமைகளில காலை 6.30 தொடக்கம் 8.30 மணிவரை அவற்றிற்கான தடுப்பூசி மருந்து வழங்கப்படடுவருகிறது. (த-35)

# வீரப்பன் வாழ்வும் வதமும்


## மீள் பார்வை

என். சொக்கன் 32

இந்த இடத்தில்தான் அதிரடிப்படையினர் ஒருபோதும் காட்டின் உட்பகுதிகளுக்குப் போனதேயில்லை. வெளியில் இருந்தபடியே சுற்றி வருவதுதான் அவர்களது வழக்கம் என்று அவ்வப்போது வந்த தகவல்களை நம்பவேண்டி இருக்கிறது. வீரப்பனைக் கொன்றது கூட காட்டுக்குள் அல்ல வெளியே வரழைத்துத்தான் காரியத்தை முடித்தார்கள் என்பதை கவனிக்க வேண்டும்.

### 2. தொடக்கத்திலிருந்தே அரசியல் தொடர்புகளைக் கத்தரிக்காதது

வீரப்பனுக்குப் பல உள்ளூர் அரசியல்வாதிகளுடன் தொடர்பு உண்டு என்ற ஆரம்பத்திலிருந்தே சொல்லப்பட்டுவந்தது. இதைப்பல பத்திரிகைகள் அவ்வப்போது பதிவு செய்தும் வந்திருக்கின்றன. அவனது சந்தனக் கடத்தல் நடவடிக்கைகளில் ஒரு சில எம்.எல். ஏக்களின் பெயர்கள் உட்பட அந்தியூர் சிறு முகை சத்தியமங்கலம் போன்ற பகுதிகளைச் சேர்ந்த உள்ளூர் அரசியல் கட்சி முக்கியஸ்தர்களின் பெயர்கள் சம்பந்தப்படுத்திப் பேசப்பட்டன. அவை தொடர்பான புலனாய்வு அப்போதே முடுக்கிவிடப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டிருக்குமானால் வீரப்பனைத் தனிமைப்படுத்துவது என்கிற செயல் இன்னும் சில ஆண்டுகளுக்கு முன்னதாகவே சாத்தியமாகியிருக்கக்கூடும்.



### 3. தூதர்கள் உதவியிருக்கலாம்

ராஜ்குமார் கடத்தலை அடுத்து நக்கீரன் கோபால் தவிரவும் பல பேர் வீரப்பனின் தூதுவர்களாகக் காட்டுப் பகுதிக்குப் போய்வந்ததைப் பார்த்தோம். இவர்களுள் பழ.நெடுமாறன், கல்யாணி, சுகுமாறன் போன்றோர். வீரப்பனைச் சந்தித்து வந்த அதே காலகட்டத்தில்தான் வீரப்பன் தன்னை ஒரு தமிழ் உணர்வாளனாக வெளிப்படுத்திக்கொண்டதும் நடந்தது. சமூகத்தில் மிகப்பெரிய அந்தஸ்தில் உள்ள இவர்கள் வீரப்பனைக் கைதுசெய்ய உதவியிருக்க முடியும். ராஜ்குமார் மீட்கப்பட்ட பிறகேனும் இவர்கள் அதற்கான உதவி களைச் செய்திருக்கலாம். மாறாக வீரப்பனை ஒரு கதாநாயகனாக்கும் மீடியாவின் முயற் சிக்கு இவர்கள் அனைவருமே மறைமுகமாக ஒத்துழைப்புத் தந்தார்கள் என்பதை கவ னிக்க வேண்டும்.

### 4. விட்டுவிட்டு வேகம் காட்டியது

ஒரு கடத்தல் சம்பவம் நடந்தால்தான் வீரப்பன் வேட்டை என்பதே சூடுபிடிக்கும் என்பது போலகிவிட்டது. கடத்தல் இல்லாத சமயங்களில் அதிரடிப்படையினர் தமது தேடுதல் பணியில் தீவிரம் செலுத்தியதாகத் தெரியவில்லை. இது, வீரப்பன் இடம் மாறிக் கொள்ளவும் பாதுகாப்பு வளையங்களைப் பலப்படுத்திக்கொள்ளவும் பெரிய சவுகரியங்களை ஏற்படுத்தித் தந்தது மறுக்க முடியாத உண்மை. பல்லாண்டு காலமாக ஒரே பணியில் ஈடுபட்டிருந்த அதிரடிப்படையினருக்குச் சலிப்பு ஏற்படும் என்பதை மறுக்க முடியாது. அதே சமயம் அவர்கள் பல்லாண்டு காலம் அப்பணியில் ஈடுபட நேர்ந்ததன் காரணத்தையும் சிந்தித்துப் பார்த்தாக வேண்டும்.

### 5. ஒருங்கிணைப்பின்மை

வீரப்பன் வேட்டை தொடர்பாக தமிழக கர்நாடக அதிரடிப்படையினருக்கு இடையே தொடக்க வருடங்களில் ஒருங்கிணைப்பு என்பது சுத்தமாக இல்லை. ஒவ்வொரு சம்பவத்தின்போதும் இரு தரப்பினரும் பரஸ்பரம் குற்றம் சாட்டிக்கொண்டிருந்தார்களே தவிர ஒருங்கிணைந்த முயற்சிகள் பெயரளவில்தாள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கு காவல் துறையினருக்கு அப்பாற்பட்ட காரணங்களும் உண்டு. இரு மாநில அரசுகளும் கூட இவ் விஷயத்தில் ஈகோ பார்த்ததைச் சொல்லவேண்டும். இரு மாநிலங்களிலும் நிகழ்ந்த ஆட்சி மாற்றங்கள் முதல்வர்களுக்கு இடையில் இருந்த உறவு நிலை போன்ற பல காரணிகள் இவ் விஷயத்தில் முக்கிய பங்காற்றியிருக்கின்றன. வீரப்பன் கடத்தல் சம்பவங்களின் போது நடந்ததாகச் சொல்லப்படும் பணப் பரிமாற்றங்களில் வெளிப்படைத்தன்மை பேணப்படாதது இதற்கு மிக் முக்கிய காரணம். தூதுவர்களாகச் சென்ற அனைவருமே தமிழர்கள் கடத்தப்பட்ட முக்கியஸ்தர்கள் இருவருமே கன்னடர்கள். இந்த விஷயங்கள் எல்லாம் நுணுக்கமாகக் கவனிக்கப்பட வேண்டியவை. பணப்பரிமாற்ற சங்கதிகள் பொதுமக்களுக்குத் தெரியவேண்டாம் என்று முடிவு செய்தாலும் இரு மாநில அரசுகளுமாவது அது பற்றிய வெளிப்படைத்தன்மை பேணியிருக்கலாம். அப்படிச் செய்திருந்தால் இத்தனை ஆண்டு காலம் இழுத்தடிக்காமல் இவ்விவகாரம் இன்னும் சீக்கிரமே கூட முடிவுக்கு வந்திருக்க முடியும்.

வீரப்பன் வேட்டையில் செலவான தொகை எத்தனை கோடிகள் என்பது பற்றிய முழு விவரம் இனி ஒருபோதுமே வெளிவராது போகலாம். ஆனால் வீரப்பனால் கொள்ளையடிக்கப்பட்ட இயற்கை வளத்தின், மனித உயிர்களின் மதிப்பைக் கணக்கிடும் போது இந்தத் தொகை பெரிதாகத் தோன்றாது. (முற்றும்)

## ஆழிப்பேரலை அகதிகளுக்கு

# 402 வீடுகள் அமைக்கும் வேலை ஆரம்பம்

(தென்மராட்சி)

ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கான நிரந்தர வீடுகளை அமைப்பதற்கு பல பொது நிறுவனங்கள் நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் ஒப்பந்தங்களை கைச்சாத்திட்ட போதிலும் கூட தற்போது 9 நிறுவனங்கள் மட்டுமே வீடுகளுக்கான நிர்மாணப்பணிகளை ஆரம்பித்துள்ளன.

இந்தவகையில் வீ்ஸ் நிறுவனம் 23 வீடுகளையும், கெயர் 20 வீடுகளையும்,ஐ.நா.கபிற்றட் 40வீடுகளையும், மெதடிஸ்த தேவாலயம் 50 வீடுகளையும்,சர்வோதயம் 20 வீடுகளையும்,கரித்தாஸ் 59 வீடுகளையும்,போரூட் 75 வீடுகளையும்,அலயன்ஸ் 20வீடுகளையும்,கியூமெடிக்கா 95வீடுகளையும் நிர்மாணித்து வருகின்றன.

இதேவேளையில், சர்வதேச மட்ட சேவை நிறுவனம் ஒன்று 500 நிரந்தர வீடுகளை தலா 5 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிப்பதற்கு முன் வந்திருந்த போதிலும் கூட பொருத்தமான காணி வசதியின்மையினால் குறித்த திட்டத்தினை அவ்வமைப்பு கைவிட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது. (து-16)

# பொலிஸ் கான்ஸ்டபிள் அம்பாறையில் பலி

(திருமலை)

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்று-பொத்துவில் வீதியில் நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் இனந்தெரியாத நபர்களினால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் பொலிஸ் உறுப்பினர் ஒருவர் மரணமடைந்தார். அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்திலிருந்து சற்று தொலைவில் நடைபெறற இச்சம்பவத்தில் காயமடைந்தவர் ரி.கே. விமலவர்த்தன (வயது-45) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கடும் காயங்களுடன் அம்பாறை வைத்தியசாலையில் அவசர சத்திர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட அவர் தீவிர சிகிச்சை பலனளிக்காமல் அங்கு மரணமடைந்துள்ளார். (ச-8)

# இலங்கை இராணுவத்தை குறைத்து மதிப்பிட முடியாது

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க தெரிவித்துள்ள கருத்துக்கள் காரணமாக இலங்கை இராணுவத்தினர் பெரும் அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

சோமவன்ஸ அமரசிங்க இலங்கை இராணுவத்தை குறைத்து மதிப்பிட்டுள்ளதாகவும் அவ்வாறு பேசுவது பொருத்தமான நடைமுறையல்ல என்றும் அவர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நாடாளுமன்ற நடவடிக்கைகள் ஆரம்பமான வேளை யில் விசேட உரையொன்றையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

எனினும் அவரைத் தொடர்ந்து உரையாற்றுவதற்கு மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர்கள் இடமளிக்கவில்லை. மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது ஆசனங்களிலிருந்து எழுந்து நின்று ரவி கருணா நாயக்காவின் உரைக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

அதன்போது சகல உறுப்பினர்களையும் தமது ஆசனங்களில் அமருமாறு சபாநாயகர் டபிள்யூ ஜே.எம்.லொக்குபண்டார தெரிவித்ததையடுத்து அவர்கள் தமது ஆசனங்களில் அமர்ந்தார்கள்.

அதேபோன்று ரவி கருணாநாயக்காவின் உரை சந்தர்ப்பத்திற்கு பொருத்தமற்றதொன்று என சபாநாயகர் குறிப்பிட்டார். (த-9)

# கிராமிய மின் விநியோகத் திட்டத்தின் கீழ் வடமராட்சி கிழக்கிற்கு மின்சாரம்

(பருத்தித்துறை)

கிராமிய மின் விநியோகத் திட்டத்தின் கீழ் வடமராட்சி கிழக்கு, குடத்தனை, மணற்காடு பிரதேசங்களுக்கு சுமார் ஒரு கோடி ரூபா செலவில் இலங்கை மின்சாரசபை மின் இணைப்புக்களை மேற்கொண்டுள்ளது.

இந் நிர்மாண வேலைகள் பூர்த்தியடைந்த நிலையில் கடந்த வாரம் இக் கிராமங்களுக்கான மின் விநியோகத்தை இலங்கை மின்சாரசபை பருத்தித்துறை மின் அத்தியட்சகர் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

அன்றைய தினம் 21குடியிருப்பாளர்களுக்கு மின்விநியோகம் வழங்கப்பட்டது. மேலும் மின் இணைப்பைப் பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பித்த குடியிருப்பாளர்களுக்கு வெகுவிரைவில் மின் இணைப்பு வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (த-52)

# பொருளாதாரத்தைப் பலப்படுத்த திட்டமிடுகிறார் ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு)

அடுத்துவரும் 10 ஆண்டுகளுக்குள் நாட்டில் 10 வீத நிலையான பொருளாதார வளர்ச்சி வேகத்தை முன்னெடுத்துச் செல்வது தனது திட்டமென எதிர்க்கடசித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதற்காக தற்போதுள்ள நிலைமையை மாற்றி புதிய செயற்திட்டம் ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பங்குச்சந்தை பிரதி அதிகாரிகளுடன் கொழும்பில் கடந்த புதனன்று இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின்போதே எதிர்க்கட்சித் தலைவர் இதனைத் தெரிவித்தார்.

கொழும்பு மாநகரசபை மேஜரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்ற இந்தப் பேச்சுவார்த்தையில் நாட்டின் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவது குறித்து எதிர்க்கட்சித் தலைவர் ஆராய்ந்துள்ளார்.

நாட்டை முன்னேற்றுவதற்கு தம்மிடம் குறுகிய, நீண்ட மற்றும் இடைக் காலத் திட்டங்கள் உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (த-9)

# புலமைப் பரிசில் பெறுபேறு அடுத்த மாதம் வெளியாகும்

(கொழும்பு)

கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையின் முடிவுகள் ஒக்டோபர் மாதம் முதல் வாரத்தில் வெளியிடப்படவுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க தெரிவித்துள்ளாா.

பரீட்சை விடைத்தாள்கள் திருத்தும் பணிகள் கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்டுளளது. இன்றுடன் விடைத்தாள்கள் திருத்தும் பணிகள் நிறைவடையவுள்ளன.

அதேவேளை, விடைத்தாள் மதிப்பீட்டுப் புள்ளியிடும் நடவடிக்கைகளில் தவறுகள் ஏற்படுவதைத் தடுக்கும் பொருட்டு விசேட கணக்கியல் மேற்பார்வை உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அனுர எதிரிசிங்க மேலும் தெரிவித்துள்ளார். (ச-8)

# வேட்புமனுத்தாக்கலுக்குப் பின்னர் பிரசாரச் சுவரொட்டிகளுக்குத் தடை

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் அது தொடர்பான பிரசாரச் சுவரொட்டிகளை ஒட்டுவதோ அவற்றை அச்சிடுவதோ தடை செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் பாதுகாப்பு தொடர்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி நவரட்ண தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதும் உள்ள அச்சகங்களின் விபரங்களைத் திரட்டுவதற்கு சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அவர் உத்தரவிட்டுள்ளார். இது விடயம் தொடர்பில் அனைத்துப் பொலிஸ் நிலையங்களையும் விழிப்புடன் இருக்குமாறும் சட்ட விதிகளை மறும் அச்சக உரிமையாளர்களையும், ஊழியர்களையும் கைதுசெய்யுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

அதேவேளை, ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுத்தாக்கல் செய்யும் முன்னர் அச்சக உரிமையாளர்களை அழைத்து தேர்தல் சட்டவிதிகள் குறித்து அறிவுறுத்துமாறும் பொலிஸாருக்கு காமினி நவரட்ண அறிவித்துள்ளார்.(ற-8)

# மனனக் கற்றலுக்கு புது வழிகாட்டும் ஆற்றல் பெருக்கல் வாய்ப்பாடு ஒலிநாடா

கற்றலை இலகுபடுத்தும் நடவடிக்கைகளில் பற்பல ஆய்வுகளும், ஆய்வுகளின் வெளிப்பாடுகளும், அவற்றை நடைமுறைப்படுத்தும் செயற்பாடுகளும் பெருகிவரும் இக்கால கட்டத்தில் ஆரம்பக்கல்வி, இடைநிலைக் கல்வி கற்கும் மாணவர்களுக்கான கணித வாய்ப்பாட்டினை மனனம் செய்யும் இலகு இசைவடிவத்திலான ஒலிநாடா வெளிவந்திருப்பது ஓர் வரப்பிரசாதமாகும்.

இசை ஒருவர் மனதை குறிப்பாக குழந்தைப் பருவத்தினரையும், பிள்ளைப் பருவத்தினரையும் வலுவாகக் கவரும். கணிதம் என்பதுவும் அதில் வாய்ப்பாடு பாடமாக்குவதும் மாணவர்களுக்கு சிரமத்தின் மேல் சிரமம் என்பது மட்டுமன்றி திண்டாட்டமான கற்றல் செயல் என எண்ணி கணிதத்தையே வெறுக்கும் பிள்ளைகளை எம் மத்தியில் காணலாம். எமது குழந்தைப் பருவத்தில் எம் மன நிலையை நாம் திரும்பிப் பார்த்தால் அது புரியும்.

கற்றல் என்பது இனிமையானது என்பதை

## திறனாய்வுக் களம்

ஒவ்வொரு அலகையும் நன்கு விளங்கி ரசித்துக் கற்கும் போதே நாம் உணர்வோம்.

அந்த வகையில் வாய்ப்பாட்டை பாடமாக்குதல், மனதில் பதித்தல், தேவைக்கேற்ப வாய்ப்பாட்டை பாடமாக்குதல் என்பதற்கான உத்தி அவ் வாய்ப்பாட்டினை இசையில் கொடுப்பதே என்ற கல்வியியல் சிந்தனையுடன் ஆற்றல் ஒலிநாடா வெளிவந்திருப்பது வரவேற்கத்தக்கது.

இக்கால மாணவர்களின் உளத் தேவையை இவ் ஒலிநாடா நிறைவு செய்யும் எனலாம். ஒரு மாணவன் விளையாடும் போதும், உணவை




உண்ணும் போதும், கைவேலை செய்யும் போதும், பொழுதுபோக்காக வேறு முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போதும் இவ் ஒலிநாடாவை போட்டுக்கேட்பதன் மூலம் தன்னை அறியாமலேயே வாய்ப்பாடு மனதில் பதியும்.

வாய்ப்பாட்டை பாடமாக்கவென்று நேரத்தை ஒதுக்காமலேயே வாய்ப்பாட்டை கையில் வைத்துப் பார்த்த வண்ணம் பாடமாக்கும் சுமையே இல்லாமல் இசையோடு இணைந்து வாய்ப்பாட்டை மனதில் பதிக்கும் ஓர் இலகு கற்றல் முயற்சியே இவ் ஆற்றல் ஒலிநாடாவின் வெளிப்பாடு எனலாம்.

யாழ்.நுண்கலைப்பீட மாணவி செல்வி கிரிஜா ராஜகோபாலின் குரல்வளம் வாய்ப்பாட்டிற்கு இனிமையையும் தெளிவையும் எழுச்சியையும் கொடுக்க யாழ். இந்துக் கல்லூரி மாணவன் செல்வன் விஸ்வநாதன் சாருஜனின் இசை அமைப்பும் ஆற்றல் ஒலிநாடாவிற்கு உயர் உந்து சக்தியைக் கொடுக்கிறது.

இவ் ஒலிநாடா மாணவர்களின் கணித மனக் கற்றலை மட்டுமன்றி கற்பிக்கும் ஆசிரியர்கள்,

**மலர் சின்னையா**
விரிவுரையாளர் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை

பெற்றோர்கள் போன்றோருக்கும் நன்மை பயப்பதாக அமையும். கணித எண்ணக்கருவும் கற்றல் கற்பித்தல் நுட்பமும் ஞாபகத்தை ஏற்படுத்தும் உளவியல் உத்தியும் கொண்டு ஒலிநாடாவை தன் விடாமுயற்சியாலும், கற்றல் எண்ணக்கரு முனைப்பினாலும் உந்தப்பட்டு இவ் ஆற்றல் ஒலி நாடாவை இசை வடிவில் வெளியிட்ட ஆக்கப் படைப்பாளியும் யாழ். இந்துக் கல்லூரியில் கடமை புரிபவருமான பரம் குகராஜாவை கல்வியியல் சமூகமும் மாணவ சமூகமும் பெற்றோரும் போற்றவும் பாராட்டவும் வேண்டும். □

# சைக்கிள் இலக்கத்தகடு பெறலாம்

(கோண்டாவில்)

நல்லூர் பிரதேச சபையினரால் இவ் ஆண்டிற்குரிய சைக்கிள் இலக்கத் தகடுகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இதுவரை அவற்றைப் பெற்றுக்கொள்ளாதோர் நல்லூர் பிரதேச சபையின் உப அலுவலகத்தில் 10 ரூபா செலுத்தி பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-36)

# பொங்கு தமிழ் நிகழ்வுக்கு தயாராகின்றனர்

(கற்கோவளம்)

எதிர்வரும் 30ஆம் திகதி நடைபெறவுள்ள 'பொங்குதமிழ்' நிகழ்வில் கலந்துகொண்டு தமது உரிமைக் குரலை சர்வதேசத்திற்கு எடுத்தியம்ப பருத்தித்துறை வாழ் மக்கள் தயாராகி வருகின்றனர்.

அதன் ஒரு கட்டமாக பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வு அடங்கிய பதாதைகளை வீதி எங்கும் கட்டுவதுடன் துண்டுப்பிரசுரங்களை விநியோகித்து வருவதையும் காணமுடிகிறது. (சு-104)

# வட- கிழக்கிலுள்ள முப்படையினருக்கும் வாக்காளர் அட்டைகளை அனுப்ப ஏற்பாடு

(கொழும்பு)

வடக்கு- கிழக்கு மாகாணத்தில் நிலைகொண்டுள்ள முப்படையினருக்கும் பொலிஸாருக்கும் தபால்மூலம் வாக்களிப்பதற்கான வாக்காளர் அட்டைகளைப் பாதுகாப்பாக அனுப்பி வைப்பதற்கு தபால் மா அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இது தொடர்பாக தபால் மா அதிபர் சேர்வின் சேனாதீர தேர்தல் ஆணையாளர் நாயகம் தயானந்த திஸாநாயக்கவுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

கடந்த காலங்களில் படையினருக்குத் தபால் மூலம் வாக்களிக்க வாய்ப்புக் கிடைக்கவில்லையெனப் பரவலாக முறைப்பாடு தெரிவிக்கப்பட்டிருந்தது. இதனைக் கருத்தில் கொண்டே இம்முறை பாதுகாப்பான முறையில் வாக்காளர் அட்டைகள் முப்படையினருக்கு கிடைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட இருப்பதாக தபால் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்த இருப்பதாகவும் தபால் மா அதிபர் சேர்வின் சேனாதீர மேலும் தெரிவித்துள்ளார். (ற)

# பாப்பரசரின் தூதராக முதன் முறையாக தமிழர்

பாப்பரசரின் தூதராக திருச்சியைச் சேர்ந்த தமிழ்ப்பாதிரியார் ஜோர்ஜ் அந்தோணிசாமி அடிகளார் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுகுறித்து திருச்சி கத்தோலிக்க பிஷப் அந்தோணி டிவோட்டா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது,

உலக கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் தலைவரான பாப்பரசர் 16ஆம் பெனடிக்ட் இன் தூதராக திருச்சி பேராலயத்தைச் சேர்ந்த பாதிரியார் ஜோர்ஜ் அந்தோணிசாமி அடிகளார் நியமிக்கப்பட்டுள்ளார்.

பாப்பரசரின் தூதராகப் பொறுப்பேற்கும் முதல் தமிழர் இவரே. இவர் பாப்பரசருக்கும் ரோம் நகர ஆலயங்களுக்கும் பாலமாகச் செயற்படவுள்ளார். (ற-7)

# இராணுவத்தை அவமதித்த ஜே.வி.பியின் பேச்சுக்கு பிரதமர் மஹிந்த மன்னிப்புக் கேட்க வேண்டும்

## ஐ.தே.க தெரிவிப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் இராணுவத்தினரை அவமதிக்கும் வகையில் ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க ஆற்றிய உரைக்கு மஹிந்த ராஜபக்ஷ மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

ஐ.தே.கவின் ஊடகவியலாளர் மாநாடு நேற்று முன்தினம் நடைபெற்றபோது பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க இதனைத் தெரிவித்தார்.

மேலும் கொழும்பு நகரசபை மைதானப் பொதுக் கூட்டத்தில் ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க உரையாற்றுகையில்,

நாட்டிற்கு உரிய வகையில் பாதுகாப்பு வழங்க முடியாவிடில் இராணுவத்தினரை வீட்டிற்கு அனுப்ப வேண்டும்.

சிங்களவர்களையும் தமிழர்களையும் கொன்றது இராணுவத்தினரே என்றும் நாட்டிற்கு உரிய வகையில் பாதுகாப்பு வழங்க முடியாவிடில் இராணுவத்தைக் கலைத்துவிட்டு இராணுவ வீரர்களை வீட்டிற்கு அனுப்ப வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

அவரின் உரையின் மூலம் பொலிஸாரும் இராணுவத்தினரும் அவமதிக்கப்பட்டுள்ளனர். நாட்டிற்காக உயிர்த் தியாகங்களைச் செய்து பணியாற்றிவரும் இராணுவத்தினரை அவர் இவ்வாறு அவமதிப்பது கண்டிக்கத்தக்கது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷக்கு ஆதரவு தெரிவித்து நடத்தப்பட்ட கூட்டத்தில் அமரசிங்க உரையாற்றியிருப்பதனால் பிரதமர் ராஜபக்ஷ இராணுவத்தினரிடமும் பொலிஸாரிடமும் மன்னிப்புக் கேட்கவேண்டும்.

ஜே.வி.பி முன்னர் நாட்டில் காட்டுத் தர்பார் நடத்தி வந்தது. அவ்வாறு நடந்து கொண்ட ஒரு தரப்பினரால் கூறப்படும் இவ்வாறான கூற்றை அவ்வளவு இலகுவில் ஒதுக்கிவிட முடியாது. அது மிகவும் பாரதூரமான விடயம். தற்போது நாட்டில் பெரும் நிதித்தட்டுப்பாடு நிலவுவதாகவும் புதிய ரூபாய் நோட்டுகள் அச்சிடுவது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் நிதியமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

அதனால் அரசாங்கம் தற்போது அரச சொத்துக்களை விற்பனை செய்ய ஆரம்பித்துள்ளது.

அதன் முதற்கட்டமாக அரச ஹோட்டல் கூட்டுத்தாபனம் முழுமையாக விற்கப்பட்டு விட்டது என்றார் திஸ்ஸ அத்தநாயக்க.

இதேவேளை, அங்கு உரையாற்றிய கட்சியின் ஊடகப் பேச்சாளர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் தற்போது தாம் கலந்துகொள்ளும் கூட்டங்களில் நாட்டில் பாதுகாப்பு இல்லை. போசாக்கின்மை நிலவுகிறது.

விலைவாசி உயர்ந்துள்ளது என்று பிரதமர் கூறிவருகிறார். இவற்றிற்கு தற்போது ஆட்சியில் இருக்கும் அரசாங்கமே பதில் கூற வேண்டும். இந்த அரசாங்கத்தின் பிரதமர் அவரே. இதற்கு பதில்சொல்லவேண்டிய பொறுப்பு அவருக்கும் அவரின் அரசாங்கத்திற்குமே உள்ளன.

அப்படி இருந்தும் அந்தப் பிரச்சினைகளை தீர்க்கமுடியாத பிரதமர் நாட்டின் அரச தலைவரானால் பிரச்சினைகளுக்கு எவ்விதம் தீர்வு காணப்போகிறார்? பிரதமருக்கு ஆதரவு தெரிவித்துள்ள ஜே.வி.பி. ஆறு வருடங்களின் பின்னர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை இரத்துச் செய்ய வேண்டும் என்கிறது.

ஆனால் ஜாதிக ஹெல உறுமய நிறைவேற்று அதிகார முறையை இரத்துச் செய்ய தேவையில்லை. அதில் சில திருத்தங்களை செய்து தொடரலாம் என்கிறது.

இவ்வாறான குழப்பங்கள் நிறைந்த இந்தக் கூட்டணியினால் நெடுங்காலம் சேர்ந்து பயணிக்க முடியாது. தனித்துப் போட்டியிட்டு வெற்றி பெறும் கட்சியினால் நாட்டுப் பிரச்சினையைத் தீர்க்க முடியாதென பெல்லாங்வில விகாரதிபதி கூறியிருக்கிறார். அதற்கமைய ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் வெற்றி பெற்ற பின்னர் ஏனைய கட்சிகளுடனும் இணைந்து நாட்டின் பிரச்சினையைத் தீர்க்கப் பாடுபடுவார் என்றார். (த-4)

# ஐ.தே.க வின் கொள்கைப் பிரகடனம் அடுத்த வாரமளவில் வெளிவரும்

(கொழும்பு)



ஜனாதிபதித் தேர்தலுக்கான கொள்கைப் பிரகடனம் அடுத்த வாரம் வெளியிடப்பட இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

கொள்கைப் பிரகடனத்தை தயாரிப்பதற்காக பொதுமக்கள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள், அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாக கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் சமாதான முன்னெடுப்புக்கள், போர் நிறுத்த ஒப்பந்த வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்த்தல் உட்படப் பல விடயங்கள் கொள்கைப் பிரகடனத்தில் உள்ளடக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ற)






வடக்கு-கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தினால் மாகாண மட்டத்தில் நடாத்தப்பட்ட தையல், மனையியல் மா பெரும் கண்காட்சி நேற்று யாழ். மத்திய கல் லூரியில் ஆரம்பமானது. இதன் ஆரம்ப நிகழ்வையும், கண்காட்சியை யாழ். மாவட்ட அரச அதிபர் கே. கணேஷ் ஆரம்பித்து வைத்து பார்வையிடுவதையும், கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ள கைவினைப் பொருட்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-ஞா. ஜங்கரன்)

# 18 ஆண்டுகளின் பின் அந்நிய மண்ணில் டெஸ்ட் தொடரை வென்ற இந்திய அணி

இந்தியா - சிம்பாவே அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி 10 விக்கெற் வித்தியாசத்தில் சிம்பாவே அணியை வெற்றிபெற்றுள்ளது.

இந்தியா சிம்பாவே அணிகளுக்கிடையே ஏற்கனவே நடந்த முதலாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி இன்னிங்ஸ் மற்றும் 980 ஓட்டங்க



ளால் வெற்றி பெற்றது.

அடுத்து இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி ஹராரேயில் நடைபெற்றது. இப்போட்டியில் சிம்பாவே முதல் இன்னிங்ஸில் சகல விக்கெற்றுக்களையும் இழந்து 161 ஓட்டங்களை எடுத்தது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 366 ஓட்டங்களை எடுத்தது. இதன் பிறகு சிம்பாவே அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் 223 ஓட்டங்களுக்கு சகல விக்கெற்றுக்களையும இழந்தது. சிம்பாவே அணி 205 ஓட்டங்களுக்குள் அவுட்டாகி இருந்தால் இன்னிங்ஸ் தோல்வி ஆகியிருக்கும். ஆனால் 223 ஓட்டங்களை எடுத்ததால் இந்தியா இரண்டாவது இன்னிங்ஸை விளையாட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

இன்னிங்ஸில் இந்தியா 19 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்கிற நிலையில இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கியது.

விக்கெட் இழப்பின்றி இந்திய அணி 19 ஓட்டங்களை எடுத்து 10 விக்கெற்றுக்களால் சிம்பாவே அணியை வெற்றி பெற்றது. காம்பீர் ஒரு ஓட்டத்துடனும் சேவாக் மூன்று பவுண்ரிகள் அடங்கலாக 14 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இந்திய அணி இரண்டு டெஸ்ட் போட்டிகளையும் வெற்றி பெற்றதன் மூலம் சிம்பாவேகது எதிரான டெஸ்ட் தொடரை கைப்பற்றியது. இந்திய அணி 1986 ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கு எதிராக அந்த நாட்டிலேயே 2-0 என்ற கணக்கில் தொடரை வென்றது. தற்போது 18 வருடங்களுக்குப் பிறகு இந்தியா மீண்டும் வெளிநாட்டில் ஒரு தொடரை கைப்பற்றியுள்ளது.

இப் போட்டியில் இர்பான் பதான் அபாரமாக பந்து வீசி சிம்பாவேயின் முதல் இன்னிங்ஸில் 7 விக்கெற்றுக்களையும் இரண்டாவது இன்னிங்ஸில் 5 விக்கெற்றுக்களையும், முதலாவது டெஸ்ட் போட்டியில் 9 விக்கெற்றுக்களையும்



வழ்த்தி மொத்தம் 21 விக்கெற்றுக்களை வீழத்தி உலக சாதனையை சமன் செய்ததோடு டெஸ்ட் தொடரின் ஆட்ட நாயகனாக தெரிவு செய்யப்பட்



டார். அத்துடன் இரண்டாவது டெஸ்ட் போட்டியில் 12 விக்கெற்றுக்களை வீழத்திய பதான் ஆட்ட நாயகனாகவும் தெரிவு செய்யப்பட்டார். (அ-19)

## கப்டன் பதவிக்கு கங்குலி தகுதியற்றவர் – சப்பல் கடிதம்



இந்தியக் கிரிக்கெட் அணியை தலைமை தாங்குதவற்கு மனதளவிலும், உடலளவிலும் சவுரவ கங்குலி தகுதியற்றவராகி விட்டார் என இந்திய கிரிக்கெட வாரியத்திற்கு பயிற்சியாளர் கிரேக் சப்பல் 6 பக்க அளவில் இ-மெயில கடிதம் அனுப்பியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதில் கங்கலி வீரர்களிடையே பிளவை ஏற்படுத்துவதாகவும் 2007 உலக கோப்பையில் இந்தியா அணி சிறப்பாக செயல்பட கங்குலியை அணியிலிருந்து நீக்க வேண்டும் எனவும் சப்பல் கேட்டு கொண்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-19)

## விளையாட்டு செய்திகள்

## செரினா அதிர்ச்சித் தோல்வி



சீன ஓபன் ரென்னிஸ் தொடரில் செரினா வில்லியம்ஸ் தனது வுாழ்நாளின் மோசமான தோல்வியை சந்தித்துள்ளார்.

டபிள்யூ.டி.ஏ அந்தஸ்து பெற்ற சீன ஓபன் ரென்னிஸ் தொடர் பீஜிங் நகரில் நடைபெற்று வரு கிறது. ஒற்றையர் பிரிவு இரண்டாம் சுற்றுப்போட்டிகள் கடந்த 21ஆம் திகதி நடைபெற்றது. இதில், ஏழு கிராண்ட் ஸ்லாம் பட்டம் வென்ற அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ் 127ஆவது இடத்தில் உள்ள சீனாவின் டியன் டியன் சன்னை எதிர்த்து விளையாடினார்.

முதல் செட்டில் அதிக தவறுகள் செய்ததன் மூலம் எளிதில் தோல்வி அடைந்தார் செரினா. பின்னர் இரண்டாவது செட்டில் போராடிய போதிலும் இவரால் வெற்றிபெற முடியவில்லை. 1 மணி நேரம 39 நிமிடங்கள் நடந்த இப்போட்டியில் செரினா 2-6,6-7 என்ற நேர் செட்களில் அதிர்ச்சித் தோல்வி அடைந்தார்.

சர்வதேச ரென்னிஸ் தொடரில் செரினா துவககத்திலே வெளியேறுவது இதுவே முதல் முறை. நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் ரஷ்யாவின் மரியா ஷரபோவா 6-0, 5-7, 6-2 என்ற செட்களில் இஸ்ரேலின் ஷாஹர் பெர்ரை போராடி வென்றார்.(19)



பங்களாதேஷ் டனான டெஸ்ட் தொடரைக் கைப்பற்றி வெற்றிக்கிண்ணத்துடன் காணப்படும் இலங்கை அணி வீரர்கள்.

## யாழ். மத்திய கல்லூரியில் தையல் மனையியல் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தினால் மாகாண மட்டத்தில் நடத்தப்படும் தையல் மனையியல் மாபெருங் கண்காட்சி நேற்று யாழ்.மத்திய கல்லூரியில் ஆரம்பமானது.

இக் கண்காட்சி நிகழ்வினை பிரதம விருந்தினராக கலந்துகொண்ட யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் ஆரம்பித்து வைத்தார்.

இக் கண்காட்சியில் வடக்கு கிழக்கு மாகாணத்தின் சகல மாவட்டங்களையும் சேர்ந்த அனைத்து மாதர் அபிவிருத்தி நிலையங்களினதும் தையல், மனையியல் பொருட்களும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

நேற்றும் இன்றும் நடைபெறும் இருநாள் நிகழ்வின் இறுதிநாள் நிகழ்வும் பரிசளிப்பு வைபவமும் இன்று நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு வடக்கு கிழக்கு மாகாண பிரதம செயலாளர் சி.ரங்கராஜா வடக்கு கிழக்கு மாகாண பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் இ.பத்மநாதன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (அ-19)

## பரிசளிப்பு வைபவம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் சிறுவர் தினத்தை முன்னிட்டு நேற்றுமுன்தினம் இடம்பெயர்ந்தோருக்கான தேசிய பாதுகாப்பிற்கும் நிலையான தீர்வுக்குமான செயற்திட்டத்திற்கமைய கட்டுரை, பேச்சு, நாடகப் போட்டிகள் என்பன நடாத்தப்பட்டன.

இப்போட்டியில் பங்குபற்றி வெற்றிபெற்றோருக்கான பரிசளிப்பு வைபவம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து இதில் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ற-19)

## நிதி ஒதுக்கீடு

(மருதங்கேணி)

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள மாமுனை கலைமகள் சனசமூக நிலையத்திற்கு தளபாடங்கள் கொள்வனவு செய்வதற்கென யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கி.சிவனேசன் 25ஆயிரம் ரூபாவை பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியிலிருந்து ஒதுக்கியுள்ளார்.

இதேவேளை மாமுனை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு தளபாடங்கள் கொள்வனவு செய்வதற்கென யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன் 30 ஆயிரம் ரூபாவை பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்ட நிதியிலிருந்து ஒதுக்கியுள்ளார். (த-35)













ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் யாழ். பிராந்திய நிலையத்தின் புதிய பரிவர்த்தன நிலையமொன்று நேற்று திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் ஸ்ரீலங்கா ரெலிக்கொம நிறுவனத்தின் யாழ். பிராந்திய முகாமையாளர் சரவணபவன் மங்கள விளக்கினை ஏற்றிவைப்பதையும், பிரதம நிறைவேற்று அதிகாரி சுகி அனான் புதிய பரிவர்த்தன நிலையத்தை திறந்துவைத்து பார்வையிடுவதையும், நிகழ்வின் விருந்தினர்களையும் படங்களில் காணலாம்.

(படம்:- ஞா. ஐங்கரன்.)

# அன்புள்ள அம்மா

12

ஆனால் பெண் உறுப்பைக் கழுவும் பொழுது எந்தவித இரசாயனப் பொருட்களோ அல்லது டெற்றோல் (Dettol) போன்றனவையோ பாவிக்கக்கூடாது. ஏனெனில் இவை தையலை விரைவில் கரைத்து விடுவதால் தையல் பிரியும் ஆபத்துள்ளது. எனவே புண்ணை மெல்லிய சுடுநீர் அல்லது உப்புக்கலந்த நீரில் கழுவினால் போதுமானது. புண்ணில் கிருமித்தாக்கம் ஏற்பட்டால் கடுமையான வலி, சிதல் போதல் மற்றும் காயச்சல் ஏற்படும். இவ்வாறான வேளைகளில் வைத்திய ஆலோசனை பெறல் வேண்டும்.

3) சிறு நீர்ப்பாதையில் கிருமித்தாக்கம்

பிரசவத்தின் பின்னர் சிறுநீர்ப்பை பலவீனமடைந்து இருப்பதால் இலகுவில் கிருமித் தொற்று ஏற்படுகிறது. இதனால் சலவாசலில் எரிவும், அடிக்கடி சிறு நீர் கழிதல், இரத்த கழிதல், காய்ச்சல் என்பன ஏற்படலாம்.

பிரசவ காலத்திலும் பின்னரும் போதிய ளவு நீர் அருந்துவதன் மூலம் இதைத் தவிர்க்கலாம்.



4) கர்ப்பகால மன உளைச்சல்

பிரசவத்தின் பின்னர் முதல் 2-3 நாட்களிற்கு சில தாய்மாருக்கு (கிட்டத்தட்ட 50 வீதம்) இனம்புரியாத ஒரு கவலை ஏற்படுகின்றது. இது உடலில் ஏற்படும் சடுதியான ஓமோன்களின் மாற்றத்தினால் ஏற்படுகின்றது. (Post partum blue).

குழந்தை பிறந்த சந்தோசத்திலிருப்பதற்குப் பதிலாக ஏதோ மனக்கவலையோடும், கலகலப்பின்றி யும் கர்ணப்படுவார்கள். இது பொதுவில் 3 ஆம் நாளின் பின்னர் மறைந்துவிடும்.

உறவினர்களுடன் சேர்ந்திருப்பதன் மூலமும், குழந்தையுடன் நேரத்தைச் செலவிடுவதன் மூலமும் இதைக் குறைக்க மு யும். வெகு அரிதில் சில தாய்மார்கள் மனம் குழம்பியும சில நேரங்களில் மூர்க்கமாகவும் இருப்பார்கள். இவ்வாறான நிலையில் வைத் திய உதவியை நாடவேண்டும்.

மார்பகங்களில் வீக்கமும் வேதனையும

பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பால் ஒரு மார்பகத்தில் அதிகமாகத் தேங்குவதால் இது ஏற்படும். குழந்தையை வீக்கமடையும் மார்பகத்தில் முதலில் பால்குடிக்க வைப்பதன் மூலமும் பாலை கைமூலமாக வெளியேற்றியும் நோவைக் குறைக்கலாம்.



மெல்லிய சுடுநீர் ஒத்தடம் கொடுப்பதன் மூலமும் பரசிற்றமோல் (பனடோல்) குளிகைகள் இரண்டை எடுப்பதன் மூலமும் வேதனையை ஓரளவு குறைக்கலாம்.

எனினும் காய்ச்சல் அல்லது கடுமையான மார்பக வேதனை இருப்பின் வைத்திய ஆலோசனையை நாடவும். முலைக் காம்பில் வெடிப்புக் காணப்படின் அம் மார்பகத்தால் பாலூட்டுவதை சில நாட்களிற்குத் தவிர்க்கவும், பாலைக் கைமூலம் வெளியேற்றவும்.

மலச்சிக்கல்

மகப்பேற்றின் பின் நோவின் காரணமாக தாய்மார் மலங்கழிப்பதை தாமதிப்பதுண்டு. இது மலச்சிக்கலை உண்டுபண்ணும். குடிக்கும் நீரின் அள்வைக் குறைப்பது நிலைமையை மோசமாக்கும். எனவே அதிகளவு நீர், பழங்கள் உட்கொள்ளவேண்டும். 3 நாட்களிற்கு மேல் மலச்சிக்கலிருப்பின் வைத்திய உதவியை நாடவேண்டும்.

மகப்பேறின் பின் -உடற்பயிற்சி

மகப்பேறின் பின்னர் தினமும் சில நிமிட நேரம் உடற்பயிற்சிகள் செய்வதன் மூலம்



உடலமைப்பை ஓரளவு பழைய நிலைக்கு கொண்டுவரலாம். அனேகமான தாய்மார்கள் மகப்பேறின் பின்னர் வேலை, உடற்பயிற்சி என்பன குறைவதால் உடல் பெருப்பதாகக் கூறுவர்.

ஆரம்பத்தில் பயிற்சிகளை மெதுவாக ஆரம்பிக்கவும். களைப்படையமுன் பயிற்சிகள் நிறுத்தப்படவேண்டும்.

முதற்கிழமை

1. இடுப்பை இறுக்கும் பயிற்சி (முன் னர் விளக்கப்பட்டது பக்கம் 49) இது உங்களுக்கு தையல் போடப்பட்டிருந்தால் அதனை ஆறவைக்கவும் உதவும்.

2. பாத அசைவு

காலை (பாதம்) தையல் இயந்திரத்தில் அசைப்பது போல் செய்தல்

3. வயிற்றை பலமாக்கல். மூச்சை இழுத்து பின்னர் வெளிவிடும் போது தசைகளை சுருக்குதல் சில செக்கன்களின் பின் இலகுவாக விடல்.

இரண்டாம் கிழமை

வயிற்றை பலமாக்கல்

1. படுத்திருந்து தலையையும் தோளையும் உயர்த்துதல்

மூன்றாம் கிழமை

படுத்திருந்து நேரே உதவிகளின்றி எழுதல்

## புதுவரவு

உங்கள் குழந்தை பிறந்தவுடன் நீங்கள்



கற்பனை செய்த தோற்றத்தை விட பெரும்பாலும் வித்தியாசமாக இருக்கும். நீங்கள் நினைத்ததைவிட சிறிய உருவமாகவும், தலை வித்தியாசமானதாகவும் இருக்கக் கூடும். (சராசரி நிறை 2.5kg. - 3.5 kg ஆக இருக்கும்). உடலை மூடி வெண்களி (Vernix) போன்றதொரு பதார்த்தம் ஒட்டியிருக்கும். தோல் சில இடங்களில் சிவந்தும், புள்ளிகளாகவும் காணப்படக்கூடும். இவையெல்லாம் குழந்தை பிறக்கும் போது ஏற்படும் தற்காலிக மாற்றங்களே.

இதுபற்றி ஏதும் சந்தேகமிருப்பின் மருத்துவ தாதியி டமோ வைத்தியரிடமோ கேளுங்கள். குழந்தையின் முகப்பரு ஒரு மாதமளவில் தானாகக் குறையும்.

தலை

பிறப்பின் போது தலை கூம்பு போல உருவமாக இருக்கக்கூடும். இது பிரசவ நேரத்தின் போது தலை அமுக்கப்படுவதால் ஏற்படுகிறது. 2 கிழமைகளில் தலைசரியான உருவமடையும். (பாட்டிமார் தலைபிடிக்க வேணடுமென கூறுவார்கள். அழகான ஆட் டுக்குட்டிக்கும், நாய்க்குட்டிக்கும் யாா தலை பிடித்து விட்டார்கள்) தலையின் மேற்பகுதி பொதபொதப்பாக இருக்கும் பகுதியில் தலை எலும்புகள் 18 மாதமளவிலேயே மூடும்.

கண்கள்

ஆரம்பத்தில் கண்களில் "வாக்கு" இருக்கும், முதல் சில மாதங்களில் மறைந்து விடும். பிரசவ நேரத்தில் தலை அமுக்கப் படுவதால் விழி மட்டல்கள் வீங்கிக் காணப் படக்கூடும். இதுவும் தற்காலிகமானதே.



கைகால்கள்

முதல் சில மணி நேரங்களிற்கு கை கால்கள் நீல நிறமடைதல் ஏற்படுதல் கூடும். இது குழந்தையின் குருதியோட்டம் புரணமாக இயங்காததன் காரணமாக ஏற் படலாம். குழந்தை அழத்தொடங்கியதும் அல்லது வேறு நிலைக்கு மாற்றியதும் நிறம் சாதாரணமாகும்.

நெஞ்சு

குழந்தையின் மார்பு வீங்கியும், பால் சுரப்பு காணப்படுவதும் சாதாரண நிகழ்வே.

**வைத்திய கலாநிதி**
**சி.நவநீதன்**

மார்பை நெருக்கி பாலை எடுக்காதீர்கள்

தோல்

தோலில் அடையாளங்களும் சிவப்பு படைகளும் ஆரம்பத்தில் காணப்படும். பின் னர் இல்லாது போகும். முதற்சில நாள்களில் தோல் கழரும். குழந்தையின் உடலிலுள்ள "புனை மயிர்" சில நாட்களில் கொட்டி விடும்.

குழந்தை தொடக்கத்தில் கறுப்பு நிற மலங்கழிக்கும் (meconium) பின் பாலருந்தத் தொடங்கியதும் நிறம் மஞ்சளாக மாறும்.

குழ்ந்தை பிறந்ததும் வைத்தியர் அல்லது தாதி பின்வரும் விடயங்களைச் சோதிப் பார்.

1. தலையின் சுற்றளவு, தலையோடு என்பன பரிசோதிக்கப்படும்.

2. குழந்தையின் இருதயமும், சுவாசப் பையும் சோதனைக்குட்படுத்தப்படும்.

3. வயிற்றுப் பகுதி, உள்ளுறுப்புக்கள் சரியாக அமைந்துள்ளதா எனப் பரிசோதிக்கப்படும்.

4. குழந்தையின் பாலுறுப்புக்கள் மலவாசல் என்பன அவதானிக்கப்படும்.

5. குழந்தையின் முதுகெலும்பு, இடுப்பெலும்பு என்பன சரியாக உள்ளதா எனப் பரிசோதிக்கப்படும்.

(தொடரும்)

குற்றவியல் சட்டத் திருத்தம்;

# அமைச்சரவைத் தீர்மானத்தை இரத்துச் செய்ய அரசு முடிவு

(கொழும்பு)

குற்றவியல் சட்டத்தின் 363 ஆவது சரத்தை திருத்தம் செய்வது குறித்த அமைச்சரவைத் தீர்மானத்தினை இரத்துச் செய்ய அரசாங்கம் முடிவெடுத்துள்ளது.

13 வயதுக்கும், 16வயதுக்கும் இடைப்பட்ட பெண்கள் சுயவிருப்பத்தின் பேரில் பாலியல் தொடர்புகளை ஏற்படுத்தினால் அதற்கான தண்டனைச் சட்டத்தினைத் தளர்த்த அரசாங்கம் முன்னர் தீர்மானித்திருந்தது.

இது தொடர்பாக நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்றக் குழுத்தலைவர் அத்துரலிய ரத்ன தேரர், அமைச்சரவையின் இத் தீர்மானம் நாட்டில் பாரிய பிரச்சினையை ஏற்படுத்தும் எனத் தெரிவித்தார்.

எந்த சுருக்கத்தின் காரணமாக அமைச்சரவை இம்முடிவினை எடுத்தது? என அவர் கேள்வி எழுப்பினார். உலகில் எங்கிலும் இவ்வாறான நிலை காணப்படவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில் இதற்குப் பதிலளித்த நீதியமைச்சர் ஜோன் செனவிரத்ன, அத்துரலிய ரத்ன தேரர் கூறுவதைப்போன்று பாரிய பிரச்சினைகள் எவையும் இத் தீர்மானத்தினால் ஏற்படமாட்டாது எனத் தெரிவித்தார். (ரு-4)

## மீளாய்வுக் கூட்டம்

நிவாரண புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சினால் 'அபிவிருத்தித்திட்டம் 2005' திட்டத்தின்கீழ் வருகின்ற வேலைத்திட்டங்கள் தொடர்பான மாதாந்த மீளாய்வுக்குழுக் கூட்டமும், அபிவிருத்தித்திட்டம் 2006இல் அமுல்படுத்தவிருக்கும் வேலைத்திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடலும் எதிர்வரும் 26ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ்.செயலகத்தில் அரசாங்க அதிபரின தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் அமைச்சின் உயர் அதிகாரிகளும் கலந்துகொள்வதால் இத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் சகல நிறைவேற்று நிறுவன அதிகாரிகளையும் தவறாது கலந்துகொள்ளுமாறு மாவட்டச் செயலக திட்டப் பணிப்பாளர் க.கேதீஸ்வரன கேட்டுக்கொண்டுள்ளார். (அ)

# இன, மத, மொழி வேறுபாடின்றி நாட்டை முன்னேற்ற ஒன்றிணைக!

(கொழும்பு)

நாட்டில் அமைதியையும் சமாதானத்தையும் ஏற்படுத்தி அதன் மூலம் அனைத்துப் பிரச்சினைக்கும் தீர்வுகாண தான் விரும்புவதாகத் தெரிவித்துள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அதற்கு நாட்டு மக்கள் அனைவரும் தம்முடன் இணைந்து செயற்பட முன்வருமாறும் அழைப்பு விடுத்துள்ளார்.

அலரிமாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூடடமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது நாட்டில் நிரந்தர சமாதானம் ஒன்றை ஏற்படுத்துவதன் மூலம் நாட்டை அபிவிருத்திப் பாதையில் கொண்டுசெல்ல முடியும். அப்போது தான் இந்த நாட்டை நாம் கட்டியெழுப்ப முடியும்.

கட்சி அரசியலோ, தேசிய இனங்களோ, சமயப் பிரிவுகளோ எந்தவொரு வேறுபாடும் இல்லாமல் இலங்கையர் என்ற ரீதியில் அனைத்து இன மக்களும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

இவ்வாறு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட நான் முன்னின்று உழைப்பேன். இது தொடர்பாக தற்போதைய எமது அரசாங்கம் சகல நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ரு-8)

# "ஈரமில்லா இதயம்" நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

அ.தம்பித்துரை எழுதிய "ஈரமில்லா இதயம்" நூல் வெளியீட்டுவிழா இன்று பிற்பகல் 3.00 மணிக்கு சுன்னாகம் கதிரமலைச் சிவன் தேவஸ்தான திருமண மண்டபத்தில் சிவஸ்ரீ சி.சரவணபவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆசியுரையை சிவாகம கலாநிதி சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக்குருக்களும், வாழ்த்துரையை சிவத்திரு வ.குமாரசாமி ஐயாவும், அறிமுகவுரையை யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் கலாநிதி சி.சிவலிங்கராசாவும், வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக சமூகவியல்துறைத் தலைவர் கலாநிதி நா.சண்முகலிங்கமும், மதிப்பீட்டுரையை யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் ஈ.குமரனும் மற்றும் நன்றியுரையை ஏழாலை அ.மி.த.க.பாடசாலை அதிபர் த.வாமதேவனும் வழங்கவுள்ளனர். (ரு-7)

## இன்று ஒரு தகவல்

# ஐன்ஸ்ரின்

ஒரு சிறுபையன் இருந்தான். அவனைப் பார்க்கும் எல்லோரும் மக்கு என்று தான் சொல்வார்கள்.அவனும் அப்படித்தான் இருந்தான். அதுமட்டுமல்ல மிகவும் வெட்கப்படுவான்.மற்ற சிறுவர்களுடன் சேர்ந்து விளையாடுவதற்குக் கூட வெட்கம்.அதனால் அவர்களது வீட்டில் உள்ள கோழிக் குஞ்சுடன்தான் அவன் விளையாடிக் கொண்டிருப்பான்.

அவன் ஒருநாள் பஸ்வண்டியில் ஏறிப் போனான். டிரைவர் இவனிடம் காசு வாங்கி டிக்கெற்றும் மீதிக்காசையும் கொடுத்தார். வாங்கி எண்ணிப்பார்த்தான் காசு குறைவது போல் அவனுக்குப்பட்டது. உடனே நடத்துநரிடம் "என்ன ஐயா பணம் குறைவாக இருக்கிறதே" என்றான். அவர் பணத்தை வாங்கி எண்ணிப் பார்த்தார். அது சரியாகவே இருந்தது. நடத்துநருக்கோ எரிச்சல். "என்னப்பா சரியாகத் தானே இருக்கிறது. உனக்கு கணக்குத் தெரியாதா?" என்று ஏசினார். சில்லறைக் காசைச் சரியாகக் கூட்டிப் பார்க்கத் தெரியாத அந்தச் சிறு பையனின் பெயர் என்ன தெரியுமா? ஐன்ஸ்ரின்.

ஆமாம்... அந்தப் பையன் தான் வளர்ந்து கணித மேதையானான். பிற்காலத்தில் அவர் போட்ட கணக்கை உலகமே புரிந்துகொள்ள மிகவும் கஷ்டப்பட்டது. அல்பிரட் ஐன்ஸ்ரினும் ஒருபுதிர். அவர்கண்டுபிடித்த தத்துவமும் ஒரு புதிர் என்றுதான் எல்லோருமே கூறுவார்கள்.

மனித அறிவுக்கு இதுவரை எட்டாமல் இருந்த ஒரு பெரிய தத்துவத்தை அவர் புரிந்துகொண்டார். அவர் புரிந்துகொண்ட அளவுக்கு மற்றவர்களையும் புரிய வைக்க அவரால் முடியவில்லை. அதனால்தான் இந்தத் தத்துவத்தைப் பற்றியே இதுவரை 900 புத்தகங்களுக்கு மேல் வெளிவந்துள்ளது. எத்தனை புத்தகம் வந்தது என்று தெரியுமே தவிர அதில் உள்ளதைப் புரிந்து கொண்டோர் எத்தனை பேர் என்பது தெரியாது.

"திடப்பொருள் எல்லாம் அழிந்து விடும். ஆனால் அது போல் காலமும் இடமும் அழியாது நிலைத்திருக்கும் என முன்பு இருந்த விஞ்ஞானிகள் சொல்வார்கள். ஆனால் இவர் என்ன சொன்னார் தெரியுமா? திடப்பொருள் அழிந்து விடுமென்றால் காலமும் இடமும் அழிந்தே தீரும்" என்றார். அதை நிரூபித்தும் காட்டினார்.

ஐன்ஸ்ரின் ஒருமுறை ரயிலில் போகும்போது பசி ஏற்பட்டது. ஏதாவது சாப்பிடவேண்டும் என்று ரயில்வே சிற்றுண்டிச் சாலைக்குப் போய் "சாப்பிட என்ன உணவு இருக்கிறது?" என்று கேட்டார். அங்கே வேலைசெய்து கொண்டிருந்த ஆள் பட்டியல் ஒன்றை எடுத்து இவரிடம் நீட்டினார். அதைப் படித்துப் பார்க்கலாம் என்று நினைத்து கண்ணாடியைத் தேடினார் கிடைக்கவில்லை. எங்கேயோ தவறவிட்டுவிட்டார்.

அதனால் பட்டியலை அவரிடமே கொடுத்து "இதை நீயே படித்துக் காட்டு" என்று கொடுத்தார். அதற்கு அந்த ஆள் "நானும் உங்களை மாதிரித்தான் சார் படிக்கத் தெரியாதவன்" என்றார். இவருக்கு வந்த சிரிப்பில் பசி கூட மறந்துவிட்டது. பொதுவாக ஒரே விடயத்தில் ஆழ்ந்த சிந்தனை உள்ளவர்கள் மற்ற விடயங்களில் அதிகமாக அக்கறை காட்டுவதில்லை.

ஐன்ஸ்ரினைப் பற்றி இன்னுமொரு கதையும் உண்டு. ஆண்கள் பொதுவாக குளிக்க ஒரு சவர்க்காரம், முகச்சவரம் செய்வதற்கு ஒரு சவர்க்காரம் என்று வைத்திருப்பது வழக்கம்.ஆனால் ஐன்ஸ்ரின் இப்படி தனித்தனியாக வைத்துக்கொள்ளவில்லையாம். இரண்டிற்கும் ஒரே சவர்க்காரத்தைத்தான் உபயோகப்படுத்தினாராம். அதைப் பார்த்தவர்கள் அவரிடம் கேட்டார்கள். அதற்கு அவர் "இதற்கென இரண்டு சோப் பயன்படுத்தினால் அது என்னைக் குழப்பிவிடும்" என்றாராம் இவர். தத்துவ உலகத்தையே குழப்புகிறது. ஆனால் இவர் எப்படிக் குழப்புகிறார் பார்த்தீர்களா?

இவ்வளவையும் கூறிவிட்டு நான் கடைசியாக கூறிவரும் விடயம் என்ன தெரியுமா? பெரிய மேதைகள் எல்லோரும் ஞாபக மறதிக்காரர்களாக இருக்கலாம் ஆனால்... ஞாபகமறதி இருப்போரையெல்லாம் மேதைகள் என்று நினைக்கக் கூடாது.அப்படிப் பார்த்தால் உலகில் வாழும் அதிகமானோர் மேதைகள். •

எனது நண்பர் ஒருவர் அவருக்கு அதிக ஞாபகமறதி. இதற்காக ஒருநாள் மருத்துவரிடம் போனார். "டாக்டர் என்னால் எதையும் நினைவில் வைத்துக்கொள்ள முடியவில்லை. கொஞ்சநேரத்திலேயே மறந்துவிடுகிறேன். நீங்கள் தான் ஏதாவது மருந்து கொடுத்து இதைச் சரி செய்ய வேண்டும்" என்றார். "சரி! உங்களுக்கு எத்தனை நாளாக இது இருக்கிறது?" என்று கேட்டார் டாக்டர். உடனே இவர் என்ன சொன்னார் தெரியுமா? "எது... எத்தனை நாளாக இருக்கிறது என்று கேட்கிறீர்கள்?" என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# தென்னிலங்கை அரசியலில் ஒரு வாரத்தில் திடீர் மாற்றம்

## ஜனாதிபதியின் வருகைக்காக காத்திருப்பாம்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நாடு திரும்பியவுடன் தென்னிலங்கை அரசியலில் திடீர்மாற்றங்கள் ஏற்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைகளுக்கு மாறாக பிரதமர் மஹிந்த ராஜபகஷ் அடிப்படை வாதக் கட்சிகளுடன் ஒப்பந்தங்களை கைச்சாத்திட்டுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துவருகிறார்.

இந்நிலையில் பிரதமரின் முக்கிய பிரசாரக் கூட்டங்களைத் தவிர்க்கவும்,அண்மைய நாட்களில் பிரதமர் எடுத்துவரும் நடவடிக்கைகளில் இருந்து சற்று விலகியிருப்பதற்காகவுமே அமெரிக்காவில் இருந்து உடனடியாக நாடு திரும்புவதைத் தவிர்த்து வார இறுதியில்அல்லது அடுத்த வார ஆம்பத்தில் நாடு திரும்பவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிடுவதில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள்ளேயே பல கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் தேர்தல் விஞ்ஞாபனம் ஜனாதிபதியின் வருகையின் பின்னரே வெளியிடப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ற-4)

# 'புதிய போத்தலில் பழைய வினாகிரி' மஹிந்தவை விமர்சிக்கிறது ஐ.தே.க

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாள ரான பிரதமர் மஹிந்தர ராஜபக்ஷ 'புதிய போத்தலில் பழைய வினாகிரி' என்று ஐக்கிய தேசியக் கட்சியின் காலிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஹேமகுமார நாணயக்கார விமர்சித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவ்ஊடகவியலாளர் மாநாட்டில் ஹேமகுமார நாணயக்கார மேலும் தெரிவிக்கையில்,

மஹிந்த ராஜபக்ஷ மக்கள் மீது அனுதாபமும், அன்பும் கொண்ட ஒரு புதிய முகத்தினைக் காட்ட முயற்சிக்கின்றார். ஆனால் அது புதிய போத்தலில் பழைய வினாகிரி போன்றது. காரணம் 1970களில் அரசியலில் காலடி எடுத்து வைத்த அவர், தமது ஆட்சிக் காலத்தில் வீழ்ச்சியடைந்த நாட்டின் பொருளாதாரத்தை மறுசீரமைக்க மறந்ததற்கான முழுப்பொறுப்பையும் ஏற்கவேண்டும்.

இப்போது மக்கள் படும் கஷ்டங்களைப்பார்த்து கவலையடைவதாகவும், அனுதாபப்படுவதாகவும் காட்டிக் கொள்ளும் மஹிந்த இவ்வாறான நிலைமையில் நாட்டை வைத்திருக்கும் அரசாங்கத்தின் பிரதமராகவே இருக்கின்றார்.

பிரதமராக இருக்கும் அவர்,பிரதமர் என்ற போர்வையை பயன்படுத்தி ஜனாதிபதியுடன் பேசி நாடு எதிர்நோக்கியுள்ள பல்வேறு பிரச்சினைகளை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவேண்டும்.

கடந்த காலங்களில் நாடு எதிர்நோக்கிய வேலைவாய்ப்பின்மை, பட்டினிச்சாவு மற்றும் சட்ட ஒழுங்கு சீர்கேடு என்பன பற்றி அவர் குறை சொல்வதாக இருந்தால் தனது ஆட்சியையும் குறை சொல்லி சுட்டிக்காட்டமுடியும்.இவ்வாறான பிரதமரால் எப்படி நாட்டை முன்னேற்ற முடியும்? எனவும் கேள்வியெழுப்பியுள்ளார். (ற-4)

# கட்சியை மறந்து சோதிடரிடம் ஆலோசனை பெறும் ஆறுமுகம்

(கொழும்பு)

இந்தியா சென்றிருக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் 'ஹைதராபாத்திலுள்ள பிரபல சோதிடர் ஒருவரிடம் ஜனாதிபதி தேர்தலில் யாருக்கு ஆதரவு வழங்குவது? என்பது தொடர்பில் ஆலோசனை நடாத்தியுள்ளார்.

பெருந்தொகைப் பணத்தை பேரமாகப் பேசி தொண்டமானை தனது பக்கம் இழுப்பதற்கு மஹிந்த ராஜபக்ஷ மேற்கொண்ட முயற்சியை அறிந்திருந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, மஹிந்தவின் முயற்சியை தடுக்கும் நோக்குடன் ஆறுமுகம் தொண்டமானை தன்னுடன் அமெரிக்காவுக்கு அழைத்துச் சென்றிருந்தார்.

தனக்கு ஒதுக்கப்பட்ட பெருந்தொகைப் பணத்துடன் அமெரிக்கா சென்றிருந்த ஆறுமுகம் தொண்டமான் தனது அமெரிக்கப்பயணத்தை முடித்துக் கொண்டு இலண்டன் சென்று அங்கிருந்து இந்தியாவுக்குச் சென்றுள்ளார்.

ஹைதராபாத் நகருக்குச் சென்ற தொண்டமான் அங்கு குறிப்பிட்ட சோதிடரைச் சந்தித்து ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவு வழங்குவது என ஆலோசனை நடாத்தியுள்ளதாகத் தெரியவருகிறது.

இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸின் தலைவர்களுடன் எந்தவித ஆலோசனையையும் நடாத்தாது ஒரு சோதிடரிடம் தனது கட்சியின் முக்கிய தீமானம் எடுக்கும் பொறுப்பை விட்டுள்ள ஒரு பொறுப்பற்ற நிலைக்கு இதன் மூலம் ஆறுமுகம் தொண்டமான் சென்றுள்ளார்.

ஜே.வி.பி,ஜாதிகஹெல உறுமய போன்ற கட்சிகள் இனவாதக் கொள்கைகளை மஹிந்த ராஜபக்ஷவிடம் வலியுறுத்தி அவருடன் ஒப்பந்தங்களைச் செய்துள்ள அதேவேளை, தமது நிபந்தனைகளை தேர்தல் அறிக்கையில் சேர்த்தால் மாத்திரமே தாம் அவருக்கு ஆதரவு வழங்கப் போவதாகவும் ஒரு உறுதியான நிலைப் பாட்டில் உள்ளன.

ஆனால், மலையகத்தில் ஒரு நிலையான வாக்கு வங்கியைக்கொண்டுள்ள இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸிற்கு தலைமைப்பொறுப்பை வகிக்கும் ஆறுமுகம் தொண்டமான் இது வரை மலைய மக்களின் நலன்களை முன்நிறுத்தி எந்தவொரு ஜனாதிபதி வேட்பாளருடனும் பேரம் பேசும் எதுவித முயற்சியையும் எடுக்கவில்லை. மாறாக பெருந்தொகைப் பணத்திற்காக இரு பிரதான அரசியல் கட்சிகளின் ஜனாதிபதி வேட்பாளர்களுடன் பேரப் பேச்சுக்களை நடாத்தியுள்ளதாக சில தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற-4)

## 23 கோரிக்கைகளை வலியுறுத்தி

# வேலைநிறுத்தப் போராட்டத்தை நடத்த தமிழர் ஆசிரியர் சங்கம் நடவடிக்கை

(திருகோணமலை)

இருபத்தி மூன்று கோரிக்கைகளை வலியுறுத்தி வேலை நிறுத்தப் போராட்டத்தை மேற்கொள்ளப் போவதாக இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

சங்கத்தின் பொதுச்செயலாளர் த.மகாசிவம் இது தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

சர்வதேச ஆசிரியர் தினமான ஒக்டோபர் மாதம் 5ஆம் திகதி அடையாள தொழிற்சங்க நடவடிக்கையாக ஒரு நாள் சுகவீன வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்படும்.

இக்கோரிக்கைகளை அரசு நிறைவேற்றத் தவறும் பட்சத்தில் ஒக்டோபர் 24ஆம் திகதியிலிருந்து தொடர்ச்சியான வேலை நிறுத்தத்தை மேற்கொள்வதற்கு சங்கத்தின் செயற்குழு முடிவு செய்துள்ளது.

தொழிற்சங்கப் போராட்டத்திற்கு சங்க உறுப்பினர்களை தயார் நிலையில் வைத்திருக்குமாறு தாய்ச் சங்க மாவட்ட, வலய மற்றும் கிளைச்சங்கங்கள் ஆகியவற்றின் நிர்வாகிகளையும் கேட்டுக்கொள்கிறோம்.

தமிழ் மொழி மூல கல்வி அபிவிருத்திகளில் தேசிய கல்வி நிறுவகமும் கல்வி வெளியீட்டுத் திணைக்களமும் பாகுபாடு காட்டுவதற்கு முற்றுப்புள்ளி வைக்கும முகமாக இவற்றின் கிளைகளை வடக்குக் கிழக்கு மாகாணத்தில் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பாடசாலைகள் தமிழ், சிங்களம், முஸ்லிம் என்று பிரிக்கப்பட்டுள்ளதால் இலங்கை கல்வி நிர்வாக சேவை, இலங்கை அதிபர் சேவை,இலங்கை ஆசிரியர் சேவை ஆகியவற்றின் பிரமாண குறிப்புக்களில் ஆளணி, இன ரீதியாக குறிப்பிட்டு அதற்கேற்ப ஆள் திரட்டல் நடைபெற வேண்டும்.

திருகோணமலையில் அமைந்துள்ள கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வளாகம் திருகோணமலை பல்கலைக் கழகமாகவும், வவுனியாவில் அமைந்துள்ள யாழ். பல்கலைக்கழக வளாகம் வன்னிப்பல் கலைக்கழகமாகவும் தரம் உயர்த்தப்படவேண்டும்.

ஆங்கில ஆசிரியர்களை உருவாக்கும் கல்வியியற் கலலூரி மன்னாரில் நிறுவப்படவேண்டும்.கிளிநொச்சி அக்கராயன்குளம் மகாவித்தியாலய்த்தில் இயங்கும் ஆசிரிய மத்திய நிலையம் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையாக மாற்றப்படவேண்டும்.

உயர்பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீளக்குடியமர அனுமதிப்பதுடன் அப்பகுதிகளில் உள்ள பாடசாலைகளை கல்வித்திணைக்களத்திடம் மீளவும் கையளித்து கல்விச் செயற்பாடுகளை தொடங்கவேண்டும் ஆகிய உள்ளிட்ட 23 கோரிக்கைகளை வலியுறுத்தி இந்தப்போராட்டம் நடைபெறவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

# பாக்.லாகூரில் இரு இடங்களில் அடுத்தடுத்து குண்டுவெடிப்பு

## 8 பேர் பலி; 40 பேர் படுகாயம்

### உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாமென அச்சம்

(லாகூர்)



பாகிஸ்தான் லாகூர் நகரில் நேற்று முன்தினம் ஒரு மணி நேரத்திற்குள் நடந்த இரு குண்டுவெடிப்புச் சம்பவங்களில 6 பேர் பலியாகியுள்ளதுடன் சுமார் 40 பேர் காயமடைந்துள்ளனர். பலியானோர் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது.

அமெரிக்காவின் தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கைக்கு பாகிஸ்தான் ஆதரவளித்து வருகிறது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தீவிரவாத அமைப்புக்கள் அவ்வப்போது பாகிஸ்தானில் வன்முறைகளில் ஈடுபட்டு வருகின்றன.

இந்நிலையில், லாகூரில் உள்ள மீனார் -இ- பாகிஸ்தான் நினைவுச்சின்னம் அருகே நிறுத்தப்பட்டிருந்த சைக்கிளில் மறைந்து வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததில்



தெருவில் கடைபோட்டு வியாபாரம் செய்த இருவர் ஸ்தலத்திலேயே உடல் சிதறிப் பலியாகினர்.

அருகில் பஸ்நிலையத்தில் நின்றவர்களில் 8 பேர் படுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நடந்த ஒரு மணி நேரத்திற்குள் லாகூரின் மத்திய பகுதியில் மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள வர்த்தகப்பகுதியில் மற்றொரு குண்டுவெடிப்பு நிகழ்ந்தது. இதில் அப்பாவிப் பொதுமக்கள் 6 பேர் பலியாகினர். 32 பேர் படுகாயமடைந்தனர்.

படுகாயமடைந்தவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. இதனால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாம் என அதிகாரிகள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

பாகிஸ்தான் தகவல் தொடர்பு அமைச்சர் ஷேக் ரஷீத் அகமது, குண்டுவெடிப்புச் சம்பவத்திற்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். குண்டுவெடிப்புக்கு காரணமானவர்கள் 'பாகிஸ்தானின் எதிரிகள்' என்றும் தெரிவித்துள்ளார்.

குண்டுவெடிப்புச் சம்பவத்திற்கு இதுவரை எந்தவொரு தீவிரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. குண்டுவெடிப்பு நடத்தியதற்கான காரணமும் தெரியவில்லையென மூத்த பொலிஸ் அதிகாரி அமீர் ஜுல்பிகர் கூறியுள்ளார். (ற)



பெற்றோல், டீசல் விலையை அடுத்த மாதத்தில் இந்தோனேஷிய அரசாங்கம் [illegible]0 சத வீதம் உயர்த்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதை எதிர்த்து தலைநகர் ஜகார்த்தாவில் நேற்று மாணவர்கள் நடத்திய போராட்டம்.

# அமெ.சூறாவளிகளின் தாக்கம்; உலகில் கச்சா எண்ணெய் விலையுயர்வு

அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள சூறாவளிகள காரணமாக உலக சந்தையில் கச்சா எண்ணெய் விலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

அமெரிக்காவில் கடந்த புதன்கிழமை ஒரு கட்டத்தில் மிக அதிகளவாக ஒரு பீப்பாய் கச்சா எண்ணெய் விலை 67.78 டொலராக உயர்ந்தது. இலண்டனில கச்சா எண்ணெய் பீப்பாய் விலை 65.36 டொலராக அதிகரித்தது.

'ரீட்டா' சூறாவளி வியாழக்கிழமை அமெரிக்காவின் மெக்சிகோ வளைகுடாவை நோக்கிச் சென்றது. இதனால் அங்குள்ள எண்ணெய் உற்பத்தி ஆலைகள் மூடப்பட்டன.

அமெரிக்காவை நான்கு வாரங்களிற்கு முன்புதான் 'கத்ரீனா' சூறாவளி கடுமையாகத் தாக்கியது. அதற்குள்ளாக இப்போது புதிதாக 'ரீட்டா' சூறாவளி வலம் வருகிறது இதுவும் பெரியளவில் சேதம் எற்படுத்தியுள்ளது. இந்த சூறாவளி மேலும் கடுமையாகி கடும் சேதம் எற்படுத்தும் என்று அஞ்சப்படுகிறது.

'ரீட்டா' சூறாவளி கடுமையடையும் என்று செய்திகள் வெளியாகியுள்ளதால் ஆசியச் சந்தையிலும் அதன் தாக்கம் பிரதிபலிக்கின்றது. (ற)

WORLD NEWS உலக தரிசனம்

# விண்வெளி நிலையத்தில் விளம்பரப்படம்!

## ஏற்பாட்டில் ஜப்பானிய நிறுவனம்

(டோக்கியோ)



விண்வெளி நிலையத்தில் விளம்பரப் படம் எடுத்து வியாபாரத்தைப் பெருக்க ஜப்பானின் நூடுல்ஸ் நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

இதற்காக எதிர்வரும் முதலாம் திகதி பிரத்தியேக கமெராக்களுடன் ரஷ்ய ராக்கெட் ஒன்று சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு அனுப்பப்படவுள்ளது. ரஷ்ய விண்வெளி வீரர்கள் ஜப்பான் நூடுல்ஸை விரும்பி உண்பது போல படம் எடுக்கப்படும். 'ஜப்பானின் கப் நூடுல்ஸ"க்கு எல்லைகள் இல்லை' என்பதை விளக்கும் வகையில் விளம்பரம் அமையவுள்ளது.

இந்த விளம்பரப் படத்தை ரஷ்யாவின் விண்வெளி கடடுப்பாட்டு மையம் மொஸ்கோவில் இருந்து கண்காணித்துப் பதிவு செய்யும். இதற்கான அறிவிப்பு டோக்கியோவில் கடந்த புதன்கிழமை வெளியிடப்பட்டது.

விண்வெளியில் படப்பிடிப்பு நடத்துவதற்கான திறன் வாய்ந்த கமெராக்களும் அதற்குரிய சிறப்பு அமைப்புக்களும் செய்யப்பட்டுள்ளன. நிஸின் உணவு தயாரிப்பு நிறுவனம் இந்த விளம்பரத்தை தயாரிக்கிறது. இதற்கு எவ்வளவு செலவு பிடிக்கும் என்ற விபரத்தை அந் நிறுவனம் வெளியிடவில்லை. (ற)



சீனாவின் ஜினான் பகுதியில் வசிக்கும் கழைக் கூத்தாடியின் 8வயது மகள் இந்தச் சிறுமி. இரண்டு வயதில் கயிற்றில் நடக்கும் வித்தையைப் பழகத் தொடங்கிய இவள், 78 அடி உயரத்தில் கட்டப்பட்ட கயிற்றில் நேற்று நடந்து சாகசம் செய்த காட்சி.



அமெரிக்காவின் சியாட்டில் நகரில் உள்ள "மைக்ரோ சொஃப்ட்" நிறுவனத்தில் அதன் தலைவர் பில்கேட்ஸை இந்திய மத்திய தொலைத் தொடர்பு மற்றும் தகவல் தொழில் நுட்பத்துறை அமைச்சர் தயாநிதி மாறன் கடந்த புதன்கிழமை சந்தித்தபோது...

# இன்டர்போல் துணைத்தலைவராக இரண்டாவது முறையாக இந்தியர்!

(புதுடில்லி)

சி.பி.ஐ. புலனாய்வு அமைப்பு இயக்குநர் யு.எஸ்.மிஸ்ரா, இன்டர்போல் துணைத் தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இந்தியர் ஒருவா இந்தப் பதவியை வகிக்கவிருப்பது இது இரண்டாவது முறையாகும்.

இன்டர்போல் துணைத் தலைவர் பதவிக்கு நடந்த தேர்தலில் மிஸ்ராவுக்கு ஆதரவாக 93 வாக்குகள் கிடைத்தன. அவரை எதிர்த்துப் போட்டியிட்ட பிஜி நாட்டின் ஆன்ட்ரூப் ஹியூக்சுக்கு 40 வாக்குகள் கிடைத்தன. இதனை சி.பி.ஐ வட்டாரங்கள் தெரிவித்தன.

மிஸ்ராவுக்கு முன்னதாக சி.பி.ஐ. முன்னாள் இயக்குநர் பி.சி.சர்மா இன்டர்போல் துணைத்தலைவராகப் பதவி வகித்தார். சர்மாதான் இன்டர்போல் துணைத்தலைவராக தேர்வு செய்யப்பட்ட முதல் இந்தியராவார்.

சி.பி.ஐ இயக்குநர் பதவியிலிருந்து யு.எஸ்.மிஸ்ரா எதிர்வரும் டிசம்பரில் ஒய்வு பெறுகிறார்.

அதன் பின்னர் அவர் இண்டர் போல் துணைத் தலைவராக பணியாற்றுவார். இன்டர்போல் தலைமையகம் பிரான்ஸ் தலைநகர் பாரீசில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

# தன்னிச்சையாகவே ஜே.வி.பி, ஹெல உறுமயவுடன் பிரதமர் மஹிந்த ஒப்பந்தங்களை மேற்கொண்டார்

## சம்பந்தனின் கேள்விக்கு திஸ்ஸவிதாரண பதிலளிப்பு

(கொழும்பு)

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஜே.வி.பியுடனும், ஹெல உறுமயவுடனும் செய்து கொண்டுள்ள ஒப்பந்தங்கள் தமது கட்சியின் கருத்துக்களைப் பிரதிபலிக்கவில்லை என ஜனாதிபதி தேர்தலுக்கான பொதுஜன ஐக்கிய முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தைத் தயாரிக்கும் குழுவின் உறுப்பினரான சமசமாஜ கட்சி அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண கூறியுள்ளார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எழுப்பிய கேள்வியொன்றிற்கு பதிலளிக்கையிலேயே பேராசிரியர் திஸ்ஸ விதாரண இவ்வாறு குறிப்பிட்டார்.

பிரதமர் செய்துகொண்டுள்ள ஒப்பந்தம் எமது கட்சியாலோ அரசாங்கத்தாலோ இன்னும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், பிரதமரே பொதுக்கட்டமைப்பை கைவிடுவதென்று ஒப்பந்தம் செய்திருக்கையில் எவ்வாறு தமிழ்மக்களின் உரிமை பற்றி அரசாங்கம் பேசலாம்? என சம்பந்தன் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சர்,

பிரதமர் தன்னிச்சையாகவே ஒப்பந்தத்தை செய்துள்ளார். பெரும்பான்மை சமூகம் எதிர்க்கும் ஒரு ஒப்பந்தத்தை செயவதில் என்ன பயன்? தனது சொந்தக் கருத்தின்படி நாடு ஒரு சமஷ்டித் தீர்வையே நாடி நிற்கிறது.

அதேவேளை, சமஷ்டி மற்றும் ஒற்றையாட்சி அமைப்புகளுக்குள்ளே பெரும் வேறுபாடு ஒன்று இல்லாத நிலையில் வெறும் சொற்களை வைத்து நாம் முரண்பாடுகளை வளர்த்துக்கொள்வது அர்த்தமற்ற செயலாகும்.

மாகாணங்களுக்கு அதிக அதிகாரங்களை வழங்கும் ஒற்றையாட்சியும் உண்டு. மிகவும் இறுக்கமான மத்திய அரசாங்கத்தை கொண்டுள்ள சமஷ்டி ஆட்சிகளும் உண்டு. எமக்கு ஒரு வாய்ப்பைத் தாருங்கள். நாம் சரியான நிலைப்பாட்டிற்குள் நாட்டை இட்டுச்செல்வோம் என்றார்.(ற)

# கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

'சுனாமியால் பாதிக்கப்பட்ட பெண்களும் அரங்கச் செயற்பாடும்' எனும் தலைப்பில் மகளிர் அபிவிருத்தி நிலையம் சுனாமி கடல் பேரலையினால் பாதிக்கப்பட்டு மன உளைச்சலுக்கு உள்ளான பெண்களை ஆற்றுப்படுத்தும் நோக்கில் குடத்தனை முதல் தொண்டமானாறு வரையான பகுதிகளில் நடத்தி வரும் கருத்தரங்குத் தொடரின் அடுத்த நிகழ்வு இன்று சனிக்கிழமை வியாபாரிமூலையில் கடற்தொழிலாளர் சங்கத்துடன் இணைந்து நடாத்தப்படவுள்ளது.

இதன்போது அரங்கச் செயற்பாட்டு குழுவினர் 'கல்லின் கசிவு' எனும் அரங்க நிகழ்வினை அரங்கேற்றவுள்ளனர்.

இந்நிகழ்வின் முக்கிய வளவியலாளராக மகளிர் அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர் சரோஜா சிவச்சந்திரன் பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் உயர்தரப் பாடசாலை உப அதிபர் இந்திராணி ஸ்ரீரங்கன் திருமதி கிருஸ்ண வேணி சூரியா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (த)

# மஹிந்தவின் மக்கள் அனுதாப முகம் புதிய போத்தலில் பழைய வினாகிரி

## ஐ.தே.க. எம்.பி.ஹேமகுமார நாணயக்கார கிண்டல்

(கொழும்பு)

ஜனாதிபதி வேட்பாளரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ புதிய போத்தலில் உள்ள பழைய வினாகிரி போன்றவர் என ஐக்கிய தேசியக் கட்சியின் காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹேமகுமார நாணயக்கார தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் அவர் இதனைத் தெரிவித்தார்.

மஹிந்த ராஜபக்ஷ மக்கள் மீது அனுதாபமும் அன்பும் கொண்ட ஒரு புதிய முகத்தைக் காட்ட முயற்சிக்கின்றார். ஆனால் அது புதிய போத்தலில் உள்ள பழைய வினாகிரி போன்றது.

இப்போது மக்கள் படும் கஷ்டங்களை பார்த்துக் கவலையடைவதாகவும், அனுதாபப்படுபவராகவும் காட்டிக்கொள்ளும் மஹிந்த ராஜபக்ஷ இவ்வாறான ஒரு மோசமான ஆட்சியில்தான் தான் பிரதமராக இருக்கிறார் என்பதை உணரவேண்டும்.

பிரதமராக இருக்கும் அவர் கடந்த காலங்களில் தனது பதவியைப் பயன்படுத்தி ஜனாதிபதியுடன் பேசி நாடு எதிர்நோக்கியுள்ள பல்வேறு பிரச்சினைகளை தீர்த்திருக்கவேண்டும்.

கடந்த காலங்களில் ஏற்பட்ட வேலை வாய்ப்பின்மை, பட்டினிச்சாவு, சட்ட ஒழுங்கு சீர்கேடு பற்றி குறைசொல்வதாக இருந்தால் இப்படி தனது ஆட்சியைத்தான் சுட்டிக்காட்ட முடியும்.

அதேபோல் எப்படி அவரால் தொடர்ந்து நாட்டை முன்னேற்ற முடியும் என ஹேமகுமார மேலும் கேள்வி எழுப்பியுள்ளார்.(அ-9)

# முன்னுரிமை அடிப்படையில் திருத்த வேலைகள்

## மாநகர ஆணையாளர் நடவடிக்கை

பருவமழை ஆரம்பிப்பதற்கு முன்னர் யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட கால்வாய்கள், வாய்க்கால்கள் முதலியவற்றை தூர் வாதித்துப்புரவு செய்து மழை நீர் தங்கு தடையின்றி ஓடிச் செல்வதற்கு வசதி செய்வதற்காக, தற்பொழுது யாழ்.மாநகர சபை எல்லைக்குள் நடைபெற்றுவரும் தெருத் திருத்த வேலைகளைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்து அத் தொழிலாளர்களைக் கொண்டு இந் நீரோடும் வாய்க்கால்களைத் துப்புரவு செய்வதற்கான நடவடிக்கைகள் மாநகர ஆணையாளர் சு.வி.கே.சிவஞானத்தின் பணிப்புரையின் பேரில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

முன்பெல்லாம் இவ்வாய்க்கால்களினூடாக ஓடும் மழைநீர் இடத்துக்கிடம் அமைந்துள்ள குளங்களில் போய் விழுவதால் மழைகாலங்களில் நீர் நிரம்பி வழிந்த வண்ணம் இருப்பதும், இதனால் கிணறுகளின் நீர் மட்டம் வற்றாமல் இருப்பதும் சர்வ சாதாரண நிகழ்வாக இருந்தது. தற்பொழுது இவ் வாய்க்கால்களும் குளங்களும் உரிய காலத்தில் தூர்வாரித் துப்புரவு செய்யப் பட்டாமல் கைவிடப்பட்ட நிலையில் இருப்பதால் நீர் வளம் குன்றி வருவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

இவற்றையெல்லாம் கருத்திற் கொண்டே, முன்னுரிமை அடிப்படையில் மழைக்காலம் ஆரம்பிப்பதற்கு முன் வாய்க்கால்களைத் துப்புரவு செய்யும் நடவடிக்கைகள் ஆணையாளரால் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. (து)

# தவறவிடப்பட்டவற்றைப் பெற்றுக்கொள்க!

நிறைவு பெற்ற நல்லைக்கந்தனின் உற்சவ காலங்களில் அடியார்களால் கண்டெடுக்கப்பட்டு யாழ்.மாநகரசபையின் உற்சவகாலப் பணிமனையில் ஒப்படைக்கப்பட்ட கைக்கடிகாரங்கள், மோட்டார் சைக்கிள் மற்றும் துவிச்சக்கர வண்டிகளின் திறப்புகள், வீட்டுத் திறப்புகள், காற்சங்கிலி மற்றும் அடையாள அட்டைகள் போன்றவற்றை நல்லூர் இந்து விடுதியிலுள்ள மாநகரசபையின் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் தகுந்த ஆதாரங்களைக் காட்டிப் பெற்றுக்கொள்ளலாமென யாழ்.மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி டாகடர மா.மரியதாசன் அறிவித்துள்ளார்.

அவற்றின் விபரம் வருமாறு:-

680340293 V- இ.தவராஜ், கச்சேரி ஒழுங்கை, 091201717 ஈ - நகுலேஸ்வரன் சந்திரவதனி, 2ஆம் வட்டாரம், எழுவைதீவு- ஜே.39, 565221914 V- இரத்தினசிங்கம் அன்னலெட்சுமி, சின்னடம்பன், நெடுங்கேணி, 537846747V புஸ்பலட்சுமி எட்வேயோன் கதியன் வீதி பெரியகல்லாறு மேற்கு - 0908028372V சுப்பிரமணியம் ஆர்த்தியன் , கந்தமுருகேசனார் வீதி, புலோலி தெற்கு, ஆறுமுகம் விசுவலிங்கம்- பள்ள மடு- மன்/14, வி.பிரசன்னா, பூந்தோட்டம நலன்புரிநிலையம், 091202572 கந்தசாமி சரஸ்வதி 6ஆம் வட்டாரம் வேலணைதெற்கு, 860363372V விசுவலிங்கம் பிரசன் னா, 41/04, மானிப்பாய், 342930255V- கணபதி தம்பிஜயா, பத்தமேனி, வலி. கிழக்கு.

*மோட்டார் சைக்கிள் அனுமதிப்பத்திரம்-2005*

என்பீ.ஜீ.கியூ..2240- கே.கிருஷ்ண குமாரி, உரும்பிராய், டபிள்யூ.ஜீ.1472 - எஸ்.ரீ.கோபாலசிங்கம், மட்டக்களப்பு, ஏ.366425 - ரீ.கௌரொன்(861562867 V). (ற)

# கால்நடை வளர்ப்புக்கு ஊக்குவிப்பு

(பச்சிலைப்பள்ளி)

"குழந்தைகளுக்குத் தாய்ப்பாலுக்கு அடுத்தபடியாக போஷாக்குள்ள உணவு பசுப்பால் ஆகும். பசுப்பால் குழந்தைகளுக்கு மாத்திரமல்ல அனைவருக்குமே ஏற்ற போஷாக்கு மிக்க உணவாகும். ஆதலால் ஒவ்வொரு வீடுகளிலும் மாடுகளை வளர்க்க வேண்டும். கால்நடை வளர்ப்பு ஊக்குவிக்கப்பட வேண்டும்."

'வேல்ட் விஷன்' நிறுவனத்தின் உதவியுடன் பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் புனர்வாழ்வுக் கழகத்தினரால் வண்ணாங்கிராம மக்களில் பயனாளிகளுக்கு மாடுகளும் ஆடுகளும் வழங்குவற்காகக் கடந்த வியாழக்கிழமை தம்பகாமப்பளை பொது மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வுக்குத் தலைமை தாங்கிய ப.ப.அ.பு.கனகா தமது தலைமையுரையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேற்படி கிராம மக்களில் 29 பயனாளிகளுக்கு தலா இரண்டு மாடுகளும், 10 பயனாளிகளுக்கு தலா நான்கு ஆடுகளும் இந்நிகழ்வின் போது வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் மாவட்ட இணைப்பாளர் ராசனும் 'வேல்ட் விஷன்' பிரதிநிதி பிரேமும் பச்சிலைப்பள்ளி புனர்வாழ்வுக் கழகப் பணியாளர்களும் கலந்துகொண்டனர். (து-47)

# கணனி மயப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டை

## இவ்வருட இறுதிக்குள் அறிமுகம்

(கொழும்பு)

கணனிமயப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டைகளை வழங்கும் நடவடிக்கைகள் இவ்வருட இறுதிக்குள் அறிமுகப்படுத்தப்படும் என ஆட்பதிவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கான கணனிக்கட்டமைப்பொன்றினைப் பெறுவதற்கான கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டுள்ளதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் நெருங்கியுள்ளதால் கேள்விப்பத்திரக் கோரல் தாமதமடைந்துள்ளதாகவும் அறிமுகப்படுத்தப்படவுள்ள புதிய கணனிமயப்படுத்தப்பட்ட அடையாள அட்டை மிகவும் பாதுகாப்பான வகையில் வடிவமைக்கப்படவுள்ளதாகவும் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ற-4)

# யாழ்ப்பாணத்தில் ரெலிக்கொம் புதிய பரிவர்த்தன நிலையம்

சிறிலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் யாழ்.பிராந்திய நிலையத்தின் புதிய பரிவர்த்தன நிலையம் ஒன்று நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக சிறிலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுகிஅனான் கலந்து கொண்டு புதிய பரிவர்த்தனை நிலையத்தை திறந்து வைத்தார்.

மேலும் இந் நிகழ்விற்கு சிறிலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் வடமாகாணத் தலைவர் வி.யோகேந்திரன், சிறிலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் பிரதம இயக்குநர் றொட்ரிக்கோ, புதிய தொலைத் தொடர்பு இணைப்பதிகாரி லயனல், செயற்திட்ட அதிகாரி திருமதி ஜெயதிலக பரிமாற்றுத் தலைவர் வீலாரட்ண ஆகியோரும், யாழ்.பல்கலைக் கழக துணைவேந்தர் சு.மோகனதாஸ், யாழ்.மாநகரசபை ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம், வங்கி முகாமையாளர்கள் மற்றும் பலரும் கலந்து கொண்டனர்.

முதற் கட்டமாக நேற்று ஆயிரம் இணைப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. மிகுதி ஆயிரம் இணைப்புக்களும் அடுத்த மாத காலப் பகுதிகளில் வழங்கப்படவுள்ளன.

சிறிலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுகிஅனான் குழுவினர் நேற்று சுன்னாகம் உப அலுவலகத்திற்கு விஜயம் மேற்கொண்டு பார்வையிட்டார்கள். (அ-19)

# பெற்றோல் பாவனை அதிகரிப்பு

(கொழும்பு)

மூன்று வருடங்களுக்குப் பின்னர் நாட்டின் பெற்றோல் பாவனை அதிகரித்திருப்பதாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

கூட்டுத்தாபனத்தின் விற்பனை திட்டமிடல் பிரிவின் முகாமையாளர் ரஞ்சித் இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில் மூன்று வருடங்களிற்கு முன்னர் நாட்டில் நாள் ஒன்றுக்கு 550 மெற்றிக்தொன் பெற்றோல் பயன்படுத்தப்பட்டது.

எனினும் இன்று அந்தத் தொகை ஆயிரத்து 100 மெற்றிக்தொன்னாக அதிகரித்துள்ளது.

நாட்டில் உந்துருளி மற்றும் முச்சக்கர வண்டிகளின் பாவனையில் ஏற்பட்ட அதிகரிப்பே இதற்குக் காரணமாகும்

நாட்டில் பெற்றோலின் தேவையைப் பூர்த்தி செய்ய தற்சமயம் மசகு எண்ணெய்கு மேலதிகமாக 50 வீத பெற்றோலையும் இறக்குமதி செய்யவேண்டியுள்ளது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத் தாபனத்திடம் சுத்திகரிப்பு வசதிகள் குறைவாகவுள்ளமையே இதற்கான காரணம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் பெற்றோல் நூற்றுக்கு 70 வீதம் முச்சக்கர வண்டிகளுக்கும் உந்துருளிகளுக்கும் பயன்படுத்தப்படுகின்றது.

மீதியாகவுள்ள 30 வீதமே சிற்றூர்திகளுக்கு பயன்படுத்தப்படுவதாக தெரிவித்துள்ளார். (த-9)

# சிறந்த சனசமூக நிலைய தெரிவு

உள்ளூராட்சி வாரத்தையொட்டி நல்லூர் பிரதேசசபை தனது எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களில் சிறந்தவற்றை தெரிந்தெடுக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதற்கமைய பிரதேச சபையால் நியமிக்கப்பட்ட குழுவினர் சனசமூக நிலையங்களை பார்வையிடுவதற்காக அவற்றுக்கு குறித்தொதுக்கப்பட்ட தினங்களில் விஜயம் செய்யவுள்ளனர்.

அத்தினங்களில் சம்பந்தப்பட்ட சனசமூக நிலையங்கள்,சம்பந்தப்பட்ட சகல ஆவணங்கள், அறிக்கைகள் முதலியவற்றுடன் பிரதிநிதியொருவரை தயாராக இருக்க ஏற்பாடு செய்யுமாறு நல்லூர் பிரதேச சபைச்செயலாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (து-36)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

சைவபரிபாலன சபையினால் நடாத்தப்படும் சைவசித்தாந்த பிரவேச, பாலபண்டிதர் தேர்வு அடுத்த வருடம் வைகாசி மாதம் முதல் வாரத்தில் நடைபெறவுள்ளது.

இவ் விண்ணப்பப்படிவங்களின் முடிவுத் திகதி ஒக்டோபர் மாதம் 10ஆம் திகதியாகும்.

இதற்கான விண்ணப்பப்படிவங்கள் பாடவிதானம் தேவையானோர் 66, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு சைவபரிபாலன சபையினர் கேட்டுள்ளனர். (த-9)

தூங்காமை கல்வி துணிவுடமை இம்மூன்றும்
நீங்கா நிலன் ஆள்பவற்கு - குறள்

வலம்புரி

## சகுனியை புகழ்ந்த துரியோதனனும் கதிர்காமரைப் புகழ்ந்த விமல்வீரவன்ஸவும்

பாண்டவர்களை அழிப்பதற்கு அவ்வப்போது கபடத்தனமான சிந்தனைகளை வழங்கிய சகுனியை துரியோதனன் புகழ்ந்து பேசுவானாம்.

பாண்டவர்களை அழிப்பதற்காக சகுனிபோட்ட சூழ்ச்சி கௌரவசேனையை அழிப்பதற்கான தென்ற உண்மையை துரியோதனன் உணர்ந்திலன்.

சகுனி தயாரித்த சூழ்ச்சியின் நுட்பங்கண்டு வியந்தானே அன்றி அந்தச் சூழ்ச்சியினால் தனக்கும் தனது வம்சத்திற்கும் ஏற்படக்கூடிய ஆபத்தை அவன் உணராமல் இருந்தமை அவனது அறியாமை என்றே கூறவேண்டும்.

துரியோதனனின் அறியாமைக்கு தெளிவு காணவேண்டிய சகுனியோ, தான் அறிந்தவற்றை அறியாமையின் பெருக்கத்திற்கு உதவினானே அன்றி அறிவை வளர்க்க உதவவில்லை.

ஆழ்ந்த அறிவுடைய சகுனி துரியோதனனுக்கு நல்லறிவைப் புகட்டியிருந்தால், பாரதப்போர் மூண்டிருக்க மாட்டாது.

அதுமட்டுமன்றி கௌரவர்களும் பாண்டவர்களும் ஒற்றுமையாக வாழும் சூழ்நிலையும் ஏற்பட்டிருக்கும்.

இதனை சகுனி செய்திருப்பானே ஆயின் காப்பியங்கள் பேசும் உயர்ந்த பாத்திரமாக அவன் விளங்கியிருப்பான்.

அத்துடன் 'சகுனி' என்ற நாமம் நல்லவர்களுக்கான பெயராகவும் சூட்டப்பட்டிருக்கும். ஆனால் கபடத்தனம், சூழ்ச்சி என்ற வினைக்குள் மூழ்கித் திளைத்த சகுனி யுத்தத்திற்கும் அழிவிற்குமே தனது அறிவைப்பயன்படுத்தினான்.

இதன் காரணமாக அவனது பெயரே வெறுப்புக்குரியதாக மாறியது.

இதேநிலையை இலங்கை ஆட்சியாளர்களின் அரசியல் புலத்திலும் காணமுடியும். வெளிவிவகார அமைச்சராக இருந்த காலஞ்சென்ற லக்ஷ்மன் கதிர்காமர் விடுதலைப்புலிகளுக்கு -தமிழ் மக்களுக்கு எதிராக சர்வதேச சமூகத்தில் பிரசாரம் செய்தார்.

ஈழத்தமிழர்களுக்கு இருக்கக்கூடிய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதை விடுத்து, தமிழ் மக்களின் விடுதலைப்போராட்டத்தை பயங்கரவாதமாக காட்டிக்கொள்வதில் அவர் தனது அறிவியலையும் செல்வாக்கையும் பயன்படுத்தினார்.

உண்மையில் லக்ஷ்மன் கதிர்காமர் தனது அறிவியலை இனப்பிரச்சினைக்கான தீர்விற்குப் பயன்படுத்தி இருப்பாராயின் இன்று இந்த நாட்டில் அமைதியும், சமாதானமும் நிலைத்திருக்கும். மக்கள் யுத்தமற்ற-அச்சமற்ற வாழ்வை அனுபவித்துக்கொள்வர்.

ஆனால் நடந்ததோ வேறு. விடுதலைப்புலிகளுக்கு எதிராக பிரசாரம் செய்வதன் மூலமே தனது அரசியல் வாழ்வை உறுதிசெய்ய முடியுமென நினைத்தார்.

அதனால் அவர் சாதித்தது எதுவுமில்லை. இவ்வாறு நாட்டில் யுத்த சூழ்நிலை தொடர்ந்து இருப்பதற்கு வித்திட்ட லக்ஷ்மன் கதிர்காமருக்கு பிரதமர் பதவியை விடவும் உயர்ந்த பதவியை வழங்கியிருக்க வேண்டுமென ஜே.வி.பியின் விமல்வீரவன்ச கூறுகிறாரெனில் சகுனியைப் புகழ்ந்த துரியோதனன் வழியில் அவரும் புகழ்கிறார் என்றே கூறவேண்டும்.

# பிரிட்டனிலிருந்து இறக்குமதியான கடதாசிகளில் வாக்காளர் அட்டைகளை அச்சிட நடவடிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் பிரிட்டனில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட சிறப்புப் பாதுகாப்புக்கடதாசிகளில் அச்சிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் வாக்காளர் அட்டைகளை அச்சிடும் நடவடிக்கை எடுக்கப்படும் என அச்சகக் கூட்டுத்தாபன அச்சகர் தெரிவித்துள்ளார்.

பிரிட்டனில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ள சிறந்த ரகக் கடதாசிகளின் பாதுகாப்புத் தன்மையை பிரிட்டன் அரசாங்கம் உறுதி செய்திருப்பதாக அரச அச்சகர் மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதி வேட்பாளர் பத்திரங்களை அச்சிட்டு தேர்தல் ஆணையாளருக்கு வழங்கி இருப்பதாக தெரிவித்த அரச அச்சகர் எதிர்வரும் 7ஆம் திகதி வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்ட பின்னர் வாக்காளர் அட்டைகள் அச்சிடும் பணிகள் உடனடியாக ஆரம்பிக்கப்படும் எனவும் கூறினார். (ற)

# நடுக்கடலில் தத்தளித்த இலங்கை மீனவர்கள் 5 பேரை மீட்டது இந்திய கடலோர காவல்படை

(சென்னை)


படகில் கோளாறு ஏற்பட்டதால் நடுக்கடலில் தத்தளித்துக்கொண்டிருந்த இலங்கை மீனவர்கள் ஐந்து பேரை இந்தியக் கடலோரக் காவல் படையினர் மீட்டுள்ளனர்.

கடந்த மாதம் 20ஆம் திகதி தீபா 5 என்ற மீன்பிடிப்



படகில் மேற்படி ஐவரும் கடலுக்கு தொழிலுக்குச் சென்றனர் பல நாட்களாகக் கடலில் சுற்றி வந்த இப்படகு கடந்த 17ஆம் திகதி சென்னை கடலோரத்தில் இருந்து 170 கிலோ மீற்றர் தூரத்தில் இருந்த போது திடீரென்று இன்ஜினில் கோளாறு ஏற்பட்டது. நடுக்கடலில் கோளாறை சரி செய்த முயன்றும் எந்தவிதமபன முன்னேற்றமும் ஏற்படவில்லை.

இதைத் தொடர்ந்தும் இம் மீனவர்கள் இலங்கையில் உள்ள படகு உரிமையாளருக்கு வயர்லெஸ் மூலம் தகவல்



கொடுத்தனர் படகை மீட்க இலங்கை கடலோர பாதுகாப்புப் படையினர் கடந்த 19ஆம் திகதி இந்திய கடலோர பாதுகாப்பு படையினரிடம் உதவி கோரினார் அதற்காக இந்திய கடலோர பாதுகாப்பு படையினர் கடந்த 19ஆம் திகதி இரவு புறப்பட்டனர்.

கடந்த சில நாட்களாக ஆந்திராவை தாக்கி வரும் கடும் புயலால் பாதிக்கப்பட்ட படகை மீட்க முடியவில்லை ஹெலிகொப்டர் உதவியுடன் படகு இருக்கும் திசையை அறிந்து கடந்த செவ்வாய்க்கிழமை நடுக்கடலில் நான்கு நாட்களாக உணவின்றியும் கடல் தண்ணீரை குடித்தும் உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த இலங்கை மீனவர்கள் ஐந்து பேரையும் இந்தியக் கடலோர பாதுகாப்பு படையின் சி.ஜி.எஸ். வராகா கப்பலின் கப்டன் ராஜன் பர்கோத்ரா தலைமையில் சென்ற குழுவினர் மீட்டனர்

கயிறு மூலம் நேற்று முன்தினம் காலை இவர்களது படகு சென்னை துறைமுகத்திற்கு இழுத்து வரப்பட்டது.

பாதிக்கப்பட்ட விசைப்படகை பழுது பார்க்கும் பணி நேற்று அது முடிந்த பின் இவர்களை இலங்கை எல்லை யில் விட்டுவர இந்தியக் கடலோர பாதுகாப்பு படை பொலிஸார் முடிவு செய்துள்ளனர். (ற)

## இந்தியா-இலங்கை இடையே பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தம்

(கொழும்பு)

இந்தியா இலங்கை இடையேயான வர்த்தகம் 7 ஆயிரத்து 612 கோடி ரூபாயை எட்டியுள்ளது. இந்த வர்த்தகத்திற்கு ஒரு ஊக்குவிப்பு அளிக்கும் வகையில் பொருத்தமான ஓர் பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தத்தை ஏற்படுத்த இந்தியாவும் இலங்கையும் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றன என்று இந்திய தூதர் நிருபமாராவ் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட பொருட்கள் அடங்கிய கண்காட்சியை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் இலங்கைக்கான இந்திய தூதர் நிருபமாரவும் இணைந்து நேற்று முன்தினம் கொழும்பில் திறந்து வைத்தனர்.

இந்நிகழ்வில் நிருபமாராவ் பேசுகையில்,

இலங்கைக்கு இந்தியா 7 ஆயிரத்து 612கோடி ரூபாய்க்கு ஏற்றுமதி செய்துள்ளது. இலங்கை கடந்த ஆண்டு ஆயிரத்து 356 கோடியே 8 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள சரக்குகளை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்துள்ளது. 5 ஆண்டு கால சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் இந்தியாவுக்கும் இலங்கைக்கும பெருமை கொள்ளக்கூடிய ஒரு விஷயமாகும் என்றார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அங்கு பேசும் போது,

இந்தியாவுடன் நெருக்கமான ஒத்துழைப்பு வைத்திருக்க நான் விரும்புகிறேன். டெல்லியின் பொருளாதார மாதிரியை எனது நாடு பின்பற்றும் என்றார். (ற)

## தங்க இடமின்றி தவிக்கும் பாம்புகள்

(மும்பை)

மும்பையில் சில மாதங்களுக்கு முன் பெய்த பேய் மழையால் மக்கள் மட்டுமல்ல ஏராளமான பாம்புகளும் தங்க இடமின்றி தவித்து வருவதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

மும்பை நகரில் சில மாதங்களுக்கு முன் பேய் மழை பெய்தது. நகரின் அனைத்து பகுதிகளும் நீரில் மூழ்கின. குடிநீர் மற்றும் மின்சார வசதி இன்றி மூன்று நாட்கள் மக்கள் அவதிப்பட்டனர். இந்த மழை மக்களை மட்டுமல்ல பாம்புகளைக்கூட விட்டுவைக்கவில்லை என்பது இப்போது தெரிய வந்துள்ளது.

மும்பை நகரின் முக்கிய பகுதிகளில சர்வ சாதாரணமாக காணப்பட்ட ஏராளமான பாம்புகளை மும்பை பிராணிகள் வதை தடுப்பு சங்க உறுப்பினர்கள் கண்டெடுத்து பாதுகாத்து வருகின்றனர். இந்தப் பாம்புகள் மும்பை நகரின் ஒதுக்குபபுறப் பகுதிகளில், வளைகளில தங்கியிருந்திருக்கலாம்.

மழை வெள்ளம் அந்த வளைகளை அழித்துவிட்டதால் வேறு வழியின்றி வேறு இருப்பிடம் தேடி இநதப் பாம்புகள் அலையத் தொடங்கியுள்ளன. என்று சங்க உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

பிடிபட்ட பாம்புகளில் சில விஷத்தன்மை அதிகம் கொண்ட கோப்ரா வகையை சேர்ந்தவை. இந்தப் பாமபுகள் விரைவில் சஞ்சய் காந்தி தேசிய பூங்கா நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்படும் என்று பிராணிகள் வதை தடுப்பு சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (ற)

## ஜனாதிபதி இன்று நாடு திரும்புகிறார்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக அமெரிக்கா சென்றிருந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இன்று நாடு திரும்பவுள்ளதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நாளை மறுதினம் கட்சின் சிரேஷ்ட அமைச்சர்களை அழைத்து பேச்சுவார்த்தை நடாத்துவார் என சுதந்திரக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை,ஜனாதிபதித் தேர்தல் கொள்கைப் பிரகடனம் தயாரிப்பு நடவடிக்கைகளிலும் இவர் முக்கிய பங்கு வகிபபார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ற-7)

## ஜனாதிபதி புலமைப் பரிசில்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு அரச அதிபர் வே. சண்முகம் ஜனாதிபதி புலமைப்பரிசில் பெற்று உயர் கல்விக்காக இலண்டன் பயணமாகவுள்ளார்.

மட்டக்களப்பு பதில் அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய சி. புண்ணியமூர்த்தி இவரது இடத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளார்(ற-7)

## தினசரி தியானம்



### விவேகச் சிந்தனைகள்

**சொல்லால் விளக்க முடியாத, விபரிக்க முடியாத அன்பின் சாரமாக இருப்பவன் இறைவன். இதை உணரமுடியுமே தவிர விளக்க முடியாது. பக்தன் எல்லையற்ற அன்புருவான இறைவனிடம் அன்பு செலுத்தி மற்ற சிற்றின்பங்களை எல்லாம் துறந்து விடுகிறான்.**

சுவாமி விவேகானந்தர்

# புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில்....

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரச கட்டுப்பாடற்ற பகுதிகளில் பாதுகாப்புக் காரணங்களைக் கருத்திற்கொண்டு வாக்குச்சாவடிகளை அமைப்பதில்லை எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனினும் அரச கட்டுப்பாடற்ற பிரதேச மக்கள் அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு வந்து வாக்களிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அவர்கள் வாக்களிப்பதற்கென போக்குவரத்து வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

இதேவேளை வடக்குக் கிழக்குப் பிரதேசங்களிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் தங்களுக்கென தனியான வாக்குச்சாவடிகள் தேவையெனக் கருதினால் எதிர்வரும் ஒக்டோபர் 26 ஆம் திகதிக்கு முன்னர் தமக்கு அறிவிக்குமாறு தேர்தல் ஆணையாளர் கேட்டுக் கொண்டார்.

தேர்தலில் 13.3 மில்லியன் வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். கடந்த ஆண்டு பொதுத் தேர்தலைவிட 4 இலட்சத்து 28 ஆயிரத்து 128 புதிய வாக்காளர்கள் இம்முறை வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளனர்.

சுனாமி அனர்த்தத்தினால் உயிரிழந்தவர்களின் தகவல்கள் தற்போது திரட்டப்பட்டுள்ளதால் தேர்தலில் இது குறித்து சிக்கல்கள் எதுவும் ஏற்படாது.

தற்போது இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் உயிரிழந்தவர்கள் தொடர்பான பூரண தகவல்கள் திரட்டப்பட்டுள்ளன. இதன் பொருட்டு கிராமசேவையாளர்கள், பிரதேச செயலாளர்களுடன் மேற்கொண்ட நடவடிக்கைகள் மற்றும் அப்பிரதேசங்களைச் சேர்ந்தவர்களிடமிருந்து திரட்டப்படும் தகவல்கள், அதன் பின்னர் நாம் மேற்கொண்ட கணக்கெடுப்புக்கள் மூலம் எமக்குக் கிடைத்த தகவல்கள் அனைத்தையும் திரட்டி எந்தப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள், எந்தளவிற்கு, எப்பிரதேசத்தில் தற்போது வாழ்கின்றவர்கள் என்ற சகல தகவல்களையும் அடையாளம் கண்டுள்ளோம்.

**மரணமான வாக்காளர்கள்**

2004 ஆம் ஆண்டிற்கான பெயர்ப்பட்டியல் தயாரிக்கப்பட்டதன் பின்னர் இவர்களில் உயிரிழந்தவர்கள் யார் போன்ற விடயங்களை சட்டப்படி நாம் அடையாளம் கண்டுள்ளோம்.

உயிரிழந்தவர்களின் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை நாம் அனுப்பப்போவதில்லை. அதை நாம் எமது பொறுப்பில் வைத்திருப்போம் என்றார்.

ஏதாவது ஒரு தினத்தில், பிழையான தகவல்களின் அடிப்படையில் உயிரிழந்தவர்கள் எனக் கருதப்படுபவர்கள் தேர்தல் தினத்தன்று வாக்களிக்க வந்தால் அவ்வாறானவர்களின் வாக்குரிமைகளை நாம் தடுக்கப்போவதில்லை. ஆனால் எவ்விதத்திலாவது அவரின் அடையாளத்தை உறுதிப்படுத்தவேண்டும்.

**மறுவாக்குப்பதிவு**

ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும்பொழுது வாக்களிப்பு நிலையச் சூழலில் ஏற்படக்கூடிய ஊழல்களை ஆராய்ந்து அவ்வாறான வாக்களிப்பு நிலையங்களில் வாக்குகளை நிராகரிப்பதற்குத் தேவையான சட்ட நிவாரணங்கள் உள்ளன.

இவ்வாறான நிலை ஏற்படும் பட்சத்தில் தேர்தல் முடிவுகளை அறிவிக்காது அவ் வாக்களிப்பு நிலைய வாக்காளர்களுக்கு மீண்டும் தேர்தலை நடத்தவேண்டி ஏற்படும்.

இதற்கமைய நவம்பர் 19 ஆம் திகதி சனிக்கிழமை மறுவாக்குப் பதிவு நடாத்தப்படும். மறுவாக்குப் பதிவு நடத்தப்பட்டால் தேர்தல் முடிவுத் திகதி அறிவிப்பது ஒத்திவைக்கப்படும் எனத் தேர்தல் ஆணையாளர் கூறினார்.

**வாக்களிப்பு முறையில் மாற்றம்**

இதேவேளை இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்க வேண்டிய முறைகள், பொதுத் தேர்தலை விட வித்தியாசமானது என தேர்தல் ஆணையாளர் கூறினார்.

ஜனாதிபதித் தேர்தல் வாக்குச் சீட்டில் புள்ளடி இடத்தேவையில்லை. விருப்பு வாக்கை 1,2 மற்றும் 3 என இலக்கமிடப்பட்டு மூன்று வேட்பாளருக்கு அளிக்கப்படவேண்டுமெனக் குறிப்பிட்டார்.

அவ்வாறு இல்லாத ஒருவருக்கு மட்டும் புள்ளடியிட்டால் அது அவருக்கான விருப்பு வாக்காக அமையும். இருவருக்கு விருப்புவாக்கு இட்டால் இருவருக்கும் அது விருப்பு வாக்காக அமையும் என தேர்தல் ஆணையாளர் கூறினார்.

**தேர்தல் கண்காணிப்பு**

இடம்பெயர்ந்த மக்கள் வாக்களிப்பதற்கென தபால் திணைக்களம் மற்றும் கிராம சேவகர்களின் உதவியுடன் வாக்காளர் அட்டை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஒலிபெருக்கி வாயிலாக இடம்பெயர்ந்தவர்களை ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு வந்து தமது வாக்காளர் அட்டைகளைப் பெற்றுக்கொள்ள அழைக்கப்படுவார்கள்.

தேர்தலுக்கென 10 ஆயிரத்து 486 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. சிலவேளைகளில் இந்த எண்ணிக்கையில் மாற்றங்கள் ஏற்படலாம்.

தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கென ஐ.நா, ஐரோப்பிய ஒன்றிய, பொதுநலவாய மற்றும் ஆசிய தேர்தல் அதிகாரிகள் சங்க தேர்தல் கண்காணிப்பாளர்களுக்கு உத்தியோகப்பற்றற்ற ரீதியில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பவ்ரல் மற்றும் உள்நாட்டு கண்காணிப்பு நிலையங்களும் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளன.

இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படவேண்டுமென்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ள போதிலும் அந்தத் தீர்ப்பில் சில விடயங்களை நான் விரும்பவில்லை. எனினும் நாட்டினதும், நாட்டு மக்களினதும் நலனைக் கருத்திற் கொண்டு நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கமைய தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறேன் எனத் தேர்தல் ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (சு-4)


## இந்துசமய ஆராய்ச்சியாளர்/ திட்ட அலுவலர்

அகில இலங்கை இந்து மாமன்றப் பணிக்கு ஓர் இந்து சமய ஆராய்ச்சியாளர் / திட்ட அலுவலர் உடனடியாகத் தேவை.

நேர்முகப் பரீட்சைக்கு 071- 2723456 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

(C-1703)

**பொதுச் செயலாளர்**


## பொங்குதமிழ் எழுச்சி வாரம்

(யாழ்ப்பாணம்)

செப்ரெம்பர் 24 தொடக்கம் 30 ஆம் திகதிவரை பொங்குதமிழ் எழுச்சிவாரமாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

இதனால் இத் தினங்களில் மக்கள் அனைவரும் எழுச்சியுடன், வீட்டு வாசலிலும், வாகனங்களிலும், சந்திகளிலும் சனசமூக நிலையங்களிலும் , பொது இடங்களிலும், வீதிகளிலும் சிவப்பு - மஞ்சள் கொடிகளைப் பறக்கவிட்டு பொங்குதமிழ் எழுச்சிவாரமாக அனுஷ்டிக்கும்படி பொங்குதமிழ் ஏற்பாட்டுக் குழுவினர் கேட்டுள்ளனர். (சு-19)

## பல்கலைக்கழக விண்ணப்பம் நேற்று முதல் விநியோகம்

இவ்வருடம் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை, பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் விநியோகிக்கப்படுகின்றது.

இதற்கான விண்ணப்பங்கள் பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவினால் நேற்றுமுதல் விநியோகிக்கப்பட்டுவருவதாக ஆணைக் குழுவின் தலைவர் ரஞ்சித் மெண்டிஸ் தெரிவித்தார்.

இந்த விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்திசெய்து ஆணைக்குழுவிற்கு அனுப்பிவைப்பதற்கு நேற்று முதல் மூன்று வாரகால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (சு-4)

## இராணுவத்...

பல்கலைக்கழக மாணவர்கள் முகமாலை சோதனைச் சாவடிக்குள் சென்று கைதுசெய்த மாணவனை மீட்பதற்கு அங்கு நின்ற மக்களும் ஒத்துழைப்பு வழங்கியதாக தெரிவிக்கப்பட்டது.

எதிர்வரும் 30ஆம் திகதி யாழ். பல்கலைக்கழக சமூகத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள மாபெரும் பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வை குழப்பும் நோக்குடனேயே பல்கலைக்கழக மாணவன் கைது செய்யப்பட்டதாக யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கடுமையாக கண்டித்துள்ளது. இதேவேளை இம் மாணவனின் கைது குறித்து தமிழ் மாணவர் ஒன்றியமும் கண்டித்துள்ளது. (சு-19)


## Patrician Institutes

பற்றீஷியன் தொழிற்பயிற்சி நிறுவனம்

### புதிய பிரிவுகள் ஆரம்பம்

இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கும் வறிய மாணவர்களுக்குமான இலவச பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன

- எனவே இதற்குத் தகுதியுடையவர்கள் 01.10.2005 இற்கு முன்பதாக எமது அலுவலகத்தில் நேரடியாக வந்து தங்கள் பெயரை பதிவுசெய்யவும்.
- ஒவ்வொரு பாடநெறிக்கும் குறிப்பிட்ட மாணவர்கள் பதிவுசெய்யப்படுவார்கள்.
- இதில் இருபாலாரும் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

**குறிப்பு: மதியபோசனம், போக்குவரத்து செலவு என்பன வழங்கப்படும்.**

இதற்கான வயதெல்லை 14 - 18 ஆகும். பயிற்சிக் காலம் 9 மாதங்கள். பயிற்சி முடிவில் சுயதொழிலில் ஈடுபடுவதற்காக சிறுதொகைப் பணம் / பொருட்கள் வழங்கப்படும்.

### பின்வரும் பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன

| | |
|---|---|
| 01. Carpentry | மரவேலை |
| 02. Masenry | கட்டுமானம் |
| 03. Welding | ஒட்டுவேலை |
| 04. Plumping & Drain layer | தண்ணீர் குழாய் பொருத்துதல் |
| 05. Electrical Wiring | மின்சார இணைப்பு |
| 06. Radio TV Mechanism | வானொலி தொலைக்காட்சி திருத்துதல் |
| 07. Lath Machinic Operating | கடைச்சல் இயந்திரம் திருத்துதல் |
| 08. Sewing | தையல் |
| 09. Palmyra - Handicraft | பன்னைவேலை |
| 10. Handicraft | பூக்கள் தலையலங்காரம் |
| 11. Refrigeration | குளிர்சாதனப்பெட்டி திருத்துதல் |
| 12. Black Smith | கம்மாலை வேலை |
| 13. Shorthand Typing - Tamil | சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் |
| 14. Shorthand English Typing | சுருக்கெழுத்தும் ஆங்கில தட்டெழுத்தும் |
| 15. Computer | கணினிப் பயிற்சி |
| 16. Book Buinding | புத்தகம் கட்டுதல் — அச்சகவேலை |
| 17. Machinie Operating | இயந்திரம் திருத்துதல் — அச்சகவேலை |
| 18. Plate Making | தட்டுத் தயாரித்தல் — அச்சகவேலை |

(C-அ.1676)

மேலதிக விபரங்களுக்கு

பதிவாளர்,
59, ST.PATRICK'S ROAD, JAFFNA
T.P.NO: 222 6148



## மனோகரா




கா.நே: 10.30, 2.30, 6.30, 9.30

## நாதன்ஸ் சினிமா

குளிரூட்டப்பட்டது யாழ்ப்பாணம்

மணிகண்டன், சிம்ரன், ஜெய்ஆகாஷ் நடித்த

கிச்சா வயசு 16

கா.நே: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

## நிறைஞ்சனாஸ் சங்கானை




கா.நே: 11.30, 02.45, 6.00 (பு.நே)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிரவுண் றோட். யாழ்ப்பாணம் என்னும் மகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.09.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.